விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 20 திங்கட்கிழமை (03.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 135

MADRAS CEMENTS LTD

ரா ம் கோ

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## நெல்லியடியில் நேற்றிரவு இளைஞன் சுட்டுக்கொலை

### பீதியில் உறைந்துள்ளனர் மக்கள்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் நேற்றிரவு 7.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுத தாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த சிவலிங்கம் சதீஸன் (வயது 26) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் பெயின்ற் விற்பனை நிலையம் ஒன்றை இன்று திறக்கவுள்ள நிலையில் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

புதுக்கடை திறப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரை வெளியே அழைத்து சுட்டுவிட்டு தப்பிச்சென்றதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

சடலம் நெல்லி (18ஆம் பக்கம் பார்க்க)

## அவைத் தலைவராக அமைச்சர் நிமால்

(கொழும்பு)

அவைத் தலைவராக விவசாய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆறாவது நாடாளுமன்றத்தின் அவை தலைவராகவும் நிமால் சிறிபால டி சில்வா கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படலாம் என ஊகம் வெளியிடப்பட்ட சிரேஷ்ட உறுப்பினர்களில் நிமால் சிறிபால டி சில்வாவின் பெயரும் இடம் (18ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பாதுகாப்புச் செயலாளர் உத்தரவு!



## யாழ். கட்டளைத்தளபதி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலிருந்து படையினரை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும் அண்மைக்கால அசம்பாவிதங்களால் அம் முடிபு ஆராயப்பட்டுவருவதாக யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க தெரிவித்தார். அத்துடன் யாழ். மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை முழுமையாக அமுல்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொலிஸ் மா அதிபருக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின் ஆசிரியர் குழாம் தயாரித்த க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கான

இரசாயனவியல்

பாட மாதிரி வினாத்தாள்

நாளை முதல்...

பிரபல ஆசிரியர் குழாம் தயாரித்த 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் செவ்வாய் பகுதி I, வியாழன் பகுதி II

## ஈ.பி.டி.பியின் சாவகச்சேரி அமைப்பாளர் சாள்ஸ் பொலிஸாரால் நேற்றுக் கைது

### யாழ்.கட்டளைத் தளபதி தகவல்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியின் சாவகச்சேரி பிரதேச அமைப்பாளர் சாள்ஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த கத்துருசிங்க தெரிவித்தார்.

சாவகச்சேரி நீதவானின் பாண்டியன் தாழ்வில் அமைந்துள்ள வாசஸ்தலம் பகுதியில் ஆயுதங்களுடன் மோட்டார் சைக்கிளில் (18ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் அடுத்த தலைவர் சஜித்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மகனான சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக்கட்சியின் அடுத்ததலைவராக உருவாகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஐக்கிய தேசியக்கட்சியின் கேகாலை மாவட்ட (18ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத்தூதுவருடன் இன்று தமிழ்க் கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக் கே.காந்தவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையொன்று இன்று நண்பகல் இந்திய இல்லத்தில் நடைபெறவிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் தற்கால அரசியல் நிலைவரம், தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக கலந்துரையாடவுள்ள (18ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை ஒரு ரூபா. அதிகரிப்பு

(கொழும்பு)

பாணின் விலை நேற்று நள்ளிரவு முதல் ஒரு ரூபாயால் உயர்த்தப்பட்டுள்ளது. கோதுமை மா ஒரு கிலோக்கிராமின் விலை 3 ரூபாயால் உயர்த்தப்பட்டதையடுத்தே அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகளின் விலைகளை (18ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அனுமதி திடீர் ரத்து! கண்டனப் பேரணி நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கடத்தல் சம்பவங்களுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நேற்று மேற்கொள்ளப்படவிருந்த கண்டனப் பேரணிக்கான அனுமதி திடீரென இடை நிறுத்தப்பட்டதால் அப் பேரணிமேற்கொள்ளப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தில் சிறுவர்கள் கடத்தப்படல், யுவதிகள் கடத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துதல் மற்றும் ஆட்களை கடத்தி கப்பம் கோரல் போன்ற சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் சக்தி அமைப்பால் நேற்று கோட்டை முனியப்பர் ஆலய முன்றலிலிருந்து கண்டனப் பேரணி மேற்கொள்ளப்படவிருந்தது.

இக் கண்டனப் பேரணி ஒலி பெருக்கி இன்றி, வன் (18ஆம் பக்கம் பார்க்க)

## 2010ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை சமர்ப்பிக்குமாறு ஐ.தே.கூ. கோரிக்கை

(கொழும்பு)

2010ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

கணக்கு மீதான வாக்கெடுப்பு நான்கு மாதத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும் என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

இந்தக்காலப்பகுதி மே மாதம் முதலாம் திகதியுடன் நிறைவடைந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்க (18ஆம் பக்கம் பார்க்க)

# சுரேஷ் ரெய்னா சதம் விளாசல்;
# இந்திய அணி அசத்தல் வெற்றி
## சுப்பர்-8 சுற்றுக்கும் முன்னேறியது



(சென் லூசியா)

சுரேஷ் ரெய்னாவின் அதிரடி சதத்தின் மூலம் இந்திய அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியது. இதன் மூலம் இந்திய அணி சி பிரிவிருந்து முதலாவது அணியாக சுப்பர் -8 சுற்றுக்கு முன்னேறியது.

.மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் 12 நாடுகள் மோதும் ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் சுற்றின் 5ஆவது போட்டியில் சி பிரிவைச் சேர்ந்த இந்திய-தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம் சிமித் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பத்தில் முரளி விஜய் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் அடுத்து களமிறங்கிய ரெய்னா சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார். மறுமுனையில் ஓரளவு பிரகாசித்த தினேஷ் கார்த்திக் 16 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ரெய்னா-யுவராஜ் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி 13.1 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதில் சுரேஷ் ரெய்னா 42 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் யுவராஜ் சிங் 30 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 37 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய யூசுப் பதான் 7 பந்துகளில் (ஒரு சிக்ஸ்சர் உட்பட) 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

மறுமுனையில் 42 பந்துகளில் அரைச்சதம் கடந்த சுரேஷ் ரெய்னா 59ஆவது பந்தில் சதம் அடித்து அசத்தினார். எனினும் சுரேஷ் ரெய்னா 60 பந்துகளில் (9 பவுண்டரிகள், 5 சிக்ஸ்சர்கள் உட்பட) 101 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அணித்தலைவர் தோனி தனது பங்கிற்கு பிரகாசிக்க இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 186 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் அணித்தலைவர் தோனி ஆட்டமிழக்காமல் 6 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸ்சர் உட்பட) 16 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் கெலீன்வெல்ட் 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், மோர்கல், கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 187 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத்தில் சறுக்கியது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் போஸ்மன் 14 பந்துகளில் 8 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த கலிஸ்-சிமித் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை மீட்டெடுத்தனர்.

இதில் ஜக் கலிஸ் 45 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்ய தென்னாபிரிக்க அணி 14.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

எனினும் அணித்தலைவர் கிரேம் சிமித் 28 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 36 ஓட்டங்களுடனும் ஜக் கலிஸ் 54 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸ்சர்கள் உட்பட) 73 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 16.3 ஓவர்களில் 128 ஓட்டங்களை எடுத்து 3 ஆவது விக்கெட்டையிழந்தது.

தொடர்ந்தும் களமிறங்கிய டி வில்லியர்ஸ் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கை யளிக்க மறுமுனையில் அல்பி மோர்கல் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மார்க் பௌச்சர் களமிறங்க மறுமுனையில் டி வில்லியர்ஸ் 15 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸ்சர்கள் உட்பட) 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 172 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந் தது. இதில் மார்க் பௌச்சர், டுமினி ஆகியோர் தலா 4 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் யூசுப் பதான் 2 விக்கெடுக்களையும் நெகரா, அறிமுக வீரர் பியூஸ் சாவ்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் சத மடித்து இந்திய அணியின் வெற்றிக்கு அடித்தளமைத்த சுரேஷ் ரெய்னா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி லீக் சுற்றில் 4 புள்ளியைப் பெற்று சி பிரிவிலிருந்து முதலாவது அணியாக சுப்பர்-8 சுற்றுக்கு முன்னேறியது.

### மூன்றாவது வீரர்

நேற்று 101 ஓட்டங்கள் எடுத்த சுரேஷ் ரெய்னா, சர்வதேச இருபது-20 வரலாற்றில் சதம் கடந்த முதல் இந்திய வீரரானார். முன்னதாக காம்பீர் 75 ஓட்டங்களை (எதிர் பாக். 2007) எடுத்திருந்தார்.

✠ சர்வதேச இருபது-20 வரலாற்றில் இம் மைல்கல்லை எட்டிய மூன்றவாது வீரர் என்ற பெருமை பெற்றார். முன்னதாக மேற்கிந் தியத் தீவுகளின் கிறிஸ் ஹயில் (117 ஓட்டங் கள் எதிர்-தென்னாபிரிக்கா 2007), நியூசி லாந்தின் பிரண்டன் மக்குலம் (116 ஓட்டங்கள் எதிர்- ஆஸ்திரேலியா 2010) இச்சாதனை படைத்திருந்தனர்.

✠ தவிர இருபது-20 உலக கோப்பை கிரிக்கெட் அரங்கில் சதம் கடந்த முதல் இந்தியர் என்ற மேலும் புதிய சாதனை படைத்தார். முன்னதாக காம்பீர் (75) அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை பெற்றிருந்தார். இதேபோல உலக கோப்பை அரங்கில் இச்சாதனைபடைத்த இரண்டாவது வீரர் என்ற பெருமையும் பெற்றார். முன்னதாக மேற்கிந்திய தீவுகளின் ஹயில்.

✠ இதன் மூலம் ரெய்னா சர்வதேச இருபது-20 கிரிக்கெட் அரங்கில் தனது அதிகபட்ச ஓட்டங்கள் எண்ணிக்கை பதிவு செய்தார். முன்னதாக கடந்த 2009இல் கிறைஸ்ட்சார்ச்சில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் 61 ஓட்டங்கள் எடுத்தார்.

### மூன்றாவது அதிகம்

தென்னாபிரிக்காவுக்கு எதிராக 186 ஓட்டங்கள் குவித்த இந்திய அணி இருபது-20 உலகக் கோப்பை அரங்கில், தனது மூன்றாவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை பெற்றது. முன்னதாக இந்திய அணி 218 (எதிர்- இங்கிலாந்து 2007), 188 (எதிர்- அவுஸ்திரேலியா 2007) ஓட்டங்கள் எடுத்தது.

## கட்டாய வெற்றிக்காக இலங்கை இன்று சிம்பாவேயுடன் மோதல்

(கயானா)

உலகக் கோப்பை இருபது-20 போட்டியில் வாழ்வா, சாவா நிலையில் இலங்கை அணி இன்று, சிம்பாவே அணியை எதிர் கொள்கிறது. ஒருவேளை இதில் தோல்வியடையும் பட்சத்தில், தொடரில் இருந்து வெளியேற நேரிடும்.

மேற்கிந்தியத் தீவுகளில் மூன்றாவது இருபது-20 உலகக் கோப்பை தொடர் நடக்கிறது. இன்று பி பிரிவில் நடக்கும் முக்கிய போட்டி ஒன்றில் சங்ககரா தலைமையிலான இலங்கை அணி, உட்செயா தலைமையிலான சிம்பாவே அணியை சந்திக்கவுள்ளது.

தனது முதல் போட்டியில் நியூசிலாந்திடம் தோல்வியடைந்த இலங்கை அணி தனது இரண்டாவது மற்றும் கடைசி லீக் போட்டியில் இன்று களமிறங்குகிறது. இதில் கட்டாயம் வெற்றி பெற்றால் தான் சூப்பர் -8 சுற்றுக்கு முன்னேற முடியும் என்ற இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

### துடுப்பாட்ட சறுக்கல்

முதல் போட்டிகளில் அணியின் துடுப்பாட்டம் பெரும் ஏமாற்றம் தந்தது. முக்கியமாக அதிரடி வீரர் டில்ஷன் மோசமான போர்ம் தொடர்கிறது. 19 பந்துகளில் 3 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது, ஐ.பி.எல். பாதிப்பில் இருந்து இன்னும் மீளவில்லை என்பதை காட்டியது.

சங்கக்கரா, கபுகெதர, மத்யூஸ் கை கொடுத்தால் நல்லது. அனுபவ ஜெயசூர்யாவை பின் வரிசையில் களமிறக்கி, வீணடிக்க கூடாது. பந்து வீச்சில் வெலகெதர, மலிங்க, சுழல் கூட்டணி முரளிதரன், மெண்டிஸ், ஜெயசூர்யா உதவலாம்.


அன்பு வாசகர்களே!
மிக விரைவில் உங்கள் வலம்புரியில்
எனதருமை
உறவுகளுக்கு
தொடர் கடிதம் வெளிவரும்.
வாசிக்கத் தவறாதீர்கள்.


## பாகிஸ்தான் போராடி வெற்றி

(செயின்ட் லூசியா)

பங்களாதேசிற்கு எதிரான இருபது-20 உலகக்கோப்பை லீக் போட்டியில் 21 ஓட்ட வித்தியாசத்தில் பாகிஸ்தான் போராடி வென்றது.

வெஸ்ட் இண்டீசில் நடக்கும் மூன்றாவது இருபது-20 உலகக் கோப்பை தொடர் நேற்று முன்தினம் நடைபெற்ற 4ஆவது லீக் போட்டியில் ஏ பிரிவில் இடம்பெற்ற பாகிஸ்தான் -பங்களாதேஷ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் ஜெயித்த பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். பாகிஸ்தான் அணிக்கு சல்மான் பட், கம்ரன் அக்மல் ஜோடி அபார ஆரம்பம் தந்தது. பங்களாதேஷ் பந்து வீச்சை விளாசித் தள்ளிய இந்த ஜோடி, விரைவாக ஓட்டங் கள் குவித்தது.

இருபது-20 அரங்கில் கம்ரான் 4 சல்மான் பட் 2 ஆவது அரைச் சதம் கடந்தனர். முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 142 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில், சாகிப் சுழலில் கம்ரான் ஆட்டமிழந்தார்.

கம்ரான் 73 ஓட்டங்களை (8 பவுண்டரி 1 சிக்ஸ்சர்) சேர்த்தார். அடுத்து வந்த அணித் தலைவர் அப்ரி 9 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஏமாற்றினார். மறுமுனையில் சல்மான் பட் 73 ஓட்டங்களுக்கு (8 பவுண்டரி 2 சிக்ஸ்சர்) ஆட்டமிழக்காமல் பாகிஸ்தான் அணி 20 ஓவர் முடிபில் 3 விக்கெட்டுக்களை இழந்து 172ஓட்டங்கள் குவித்தது.

சவாலாக இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணி இம்ருல் 0, தமிம் 19, விக்கெட்டுக்களை விரைவில் இழந்தது. பின்னர் களமிறங்கிய அஷ்ரபுல் அதிரடியில் அசத்தினார். இவருக்கு சகிப் நல்ல ஒத்துழைப்புக் கொடுக்க ஓட்ட வேகம் அதிகரித்தது. சகிப் 47 ஓட்டங்களுக்கு (3 பவுண்டரிகள் 2 சிக்ஸ்சர்) ஆட்டமிழந்தனர். மகமதுல்லா 0 சொதப்பினார்.

மறுமுனையில் அரை சதம் கடந்தார் அஷ்ரபுல். தொடர்ந்து மிரட்டிய இவர் 65 ஓட்டங்களுக்கு (3 சிக்ஸ்சர் 4 பவுண்டரி) ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணிக்கு சிக்கல் ஏற்பட்டது. பின் வரிசையில் முஷ்பிகுர் 4, மொர்சா 1 ஏமாற்ற பங்களாதேஷ் அணி 20 ஓவர் முடிபில் 7 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. பாகிஸ்தான் தரப்பில் சமி 3, ஆமர்2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.


வீடு விற்பனைக்கு
சென் ஜோண்ஸ் சேர்ஜ் வீதி, சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:
021 3007792
(1312)



காணி விற்பனைக்கு
இல.43 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுண்ணாகம் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள பின் வரும் தொலைபேசி இலக்கத்தில் கதைக்கலாம்.
Dr.R.கனகலிங்கம் 0779522105
Mr.சி.தனஞ்சயன் 0714102174
Mrs.ச.ஜெயபாலன் 0771622770
(1212)

# இன்று ஒரு தகவல்

## முயலுக்கு மூன்று கால்

ஒரு ஊரில் ஒரு குருவும் ஒரு சிஷ்யனும் இருந்தார்கள். அவர்கள் இருவரும் வித்தியாசமான குணமுடையவர்கள்.

அந்த சிஷ்யன் ஒருநாள் முயல் வேட்டைக்குக் கிளம்பினான்.

காட்டுக்குப் போய் ஒரு முயலைப் பிடித்துக் கொண்டு வந்தான். நெருப்பில் வாட்டி ஒரு காலை மட்டும் சாப்பிட்டான். மீதி மூன்று கால் இருந்தது.

அதைக் கொண்டு போய் தன் குருவிடம் கொடுத்தான். அவர் அதைப் பார்த்து விட்டு "இன்னொரு கால் எங்கே?" என்று கேட்டார்.

சிஷ்யன் பார்த்தான். "நான் பிடித்த முயலுக்கு மூன்று கால் தானே இருந்தது" என்றான்.

சிஷ்யன் பொய் சொல்கிறான் என்று குருவுக்குத் தெரிந்து விட்டது. "சரி... இவன் சொன்னது தான் சொன்னான். சொன்ன பொய்யைக் காப்பாற்றும் சாமர்த்தியமாவது இவனுக்கு உண்டா?" என்பதை சோதித்துப் பார்க்க முடிவு செய்தார். அதனால் அந்த விடயத்தை அப்படியே விட்டுவிட்டார். அதன் பின் சில நாட்கள் கழித்து சிஷ்யனைக் கூப்பிட்டு,

"நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால்?" என்று கேட்டார்.

"மூன்றே கால் தான்" என்று சாதித்தான் அவன்.

மறுபடியும் ஒரு தடவை கேட்டார். அவனும் இப்படியே பதில் சொன்னான்.

சரி, இவனுக்கு இன்னொரு பரீட்சை வைத்துப் பார்க்கலாம் என்று முடிவு செய்தார்.

சிஷ்யனைக் கூப்பிட்டார்.

"என்ன சுவாமி?" என்று வந்து நின்றான்.

அவனுடைய நெற்றியில் அகலமாக ஒரு பொட்டு வைத்தார்.

"நீ தினமும் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார்.

"செய்கிறேன்" என்றான்.

"நீ என்ன செய்ய வேண்டும் என்றால் தினமும் ராஜாவுக்கு வைத்திருக்கும் சாப்பாட்டை தெரியாமல் திருடிக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து விட வேண்டும்" என்றார்.

"இவ்வளவு தானே... கவலைப்படாதீங்க" என்று சொல்லி விட்டு அவன் போனான். சொன்னது போலவே சாப்பாட்டைத் தெரியாமல் கிளப்பிக் கொண்டு வந்து விட்டான்.

ஒருநாள்– இரண்டு நாள் இல்லை. தொடர்ந்து செய்ய ஆரம்பித்தான்.

ராஜா பார்த்தார். தினமும் தன்னுடைய சாப்பாடு திருட்டுப் போவது அவருக்கு அவமானமாகி விட்டது.

திருடன் யாரென்பதை கண்டுபிடிக்க தீர்மானித்தார்.

இந்த சிஷ்யன் நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டு வழக்கம் போல ராஜாவின் சாப்பாட்டை திருடப் போனான். பாத்திரத்தில் எல்லாம் சூடாக இருந்தது. ஆவி பறந்தது.

இவன் அப்படியே நைசாக அந்தப் பாத்திரத்தை தூக்கிக் கொண்டு வந்தான்.

அந்த ஆவி இவனுடைய நெற்றியில் பட்டு அதிலிருந்த பொட்டு வேர்வையில் கரைந்து போய் விட்டது. பொட்டு அழிந்திருந்ததை வைத்து திருடன் யாரென்பதை சுலபமாகக் கண்டுபிடித்து விட்டார் ராஜா.

அதற்குப் பின் சும்மா இருப்பாரா? உடனே, "என்னுடைய சாப்பாட்டைத் திருடிய இவனைச் சிரச்சேதம் செய்யுங்கள்" என்றார். அதாவது 'அவனுடைய தலையை வெட்டிப் போடுங்கள்' என்று உத்தரவிட்டார்.

தண்டனையை நிறைவேற்றுவதற்காக அவனை அழைத்துப் போனார்கள். அந்தச் சமயத்தில் குரு அங்கே வந்தார்.

"அடே... சிஷ்யா! இப்பொழுதாவது நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால் என்று சொல்லு! உன்னை இந்தத் தண்டனையிலிருந்து காப்பாற்றி விடுகிறேன்" என்றார்.

அப்பொழுதும் அவன் "நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் தான்!" என்று சாதித்தான்.

குரு அசந்து போய் விட்டார். சிஷ்யனுடைய திடசித்தம் அவரை ஆச்சரியப்பட வைத்தது. நேராக ராஜாவிடம் போய் சிபாரிசு பண்ணி சிஷ்யனுக்குக் கொடுத்த தண்டனையை ரத்து பண்ணி விட்டார்.

அதன்பின் சிஷ்யனை அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்து உபதேசம் செய்ய ஆரம்பித்தாராம்.

சொன்னது பொய்யாக இருந்தால் கூட அந்தப் பொய்யைக் காப்பாற்றுவதில் அவன் எவ்வளவு உறுதியாக இருக்கிறான் பாருங்க.

இன்னொரு சிஷ்யன் இருந்தான்.

அவன் முயலின் நான்கு கால்களையும் சாப்பிட்டு விட்டு அதற்கு நான்கு கால்களுமே இல்லை என்று குருவிடம் சொன்னானாம்.

"அதை நம்புமளவிற்கு உன் குரு என்ன முட்டாளா?" என்று கேட்டேன்.

"ஆமாம்... அதனால் தான் அவர் எனக்குக் குருவாக இருக்கிறார்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முழுக்கல்வி முறையிலும் கட்டமைப்பு மாற்றம் ஏற்படுத்தப்படும்–கல்வியமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது அமுலில் உள்ள கல்வி முறைமையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என புதிய கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கும் போது,


எதிர்வரும் 12 மாத காலப்பகுதியில் முன்பள்ளி கல்வி முதல் உயர் கல்வி வரையிலான முழுகல்வி முறைமையிலும் கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் ,தேசியக் கல்விக் கொள்கை ஒன்றை அமுல்படுத்துவதே தமது பிரதான இலக்கு எனவும் அதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்க்கும் போது எற்பட்டுள்ள பல்வேறு குளறுபடிகளுக்கு உரிய தீர்வுத் திட்டம் காணப்படும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

பிள்ளைகள் பிறந்த நாள் முதல் எந்தப் பாடசாலையில் எவ்வாறு சேர்ப்பது என்று சுமையுடன் பெற்றோர் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தரம் ஆறில் பயிலும் மாணவ மாணவியர் பிழையின்றி தமது தாய்மொழியில் சிங்களம் அல்லது தமிழில் ஓர் கட்டுரையை எழுத முடியாத நிலைமையே தற்போதைய கல்வி முறையில் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் நீண்டகால நலனைக் கொண்டு நிலையான ஓர் கல்விக் கொள்கை பின்பற்றப்பட வேண்டுமெனவும் இதற்கமைய கற்பிக்கும் முறைமை, பாட விதானம்,



பரீட்சைகள் வினாத்தாள் திருத்தும் முறை போன்றவை மாற்றியமைக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஆசிரியர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கும் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-4)

# அரசசேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றங்கள்

## அரச, உள்விவகார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

அரசசேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றங்களை அமுல்படுத்த அரச நிர்வாகம் மற்றும் உள்விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய அரச சேவை உத்தியோகத்தர்களது இந்த வருடத்திற்கான இடமாற்றங்கள் இன்று முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை இன்று முதல் ஜுன் மாதம் முதலாம் திகதி வரை மேற்கொள்ள திட்டமிட்டிருந்த இடமாற்ற உத்தரவுகளை எதிர்வரும் ஜுன் முதலாம் திகதி முதல் அமுல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உள்விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய இணைந்த சேவை, அரச முகாமையாளர் சேவை, அலுவலக பணியாளர் சேவை, சாரதி சேவை என்பவற்றை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இந்த வருடத்திற்கான இடமாற்றங்களை குறித்த திகதிகளில் அமுல்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# மகா கும்பாபிஷேகம்

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் புதன்கிழமை வரை இடம் பெறும் இப் பெருவிழாவில் ஹோம வழிபாடு, சிறப்பு பூஜைகள், விசேட அபிஷேகங்கள் என்பன நடைபெறவுள்ளன.

மேலும் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிமுதல் 4 மணிவரை எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வும் மறுநாள் 5ஆம் திகதி மகாகும்பாஷேகமும் இடம் பெறவுள்ளது. (4)

# காரைநகர் பிரதேச உள்ளூர் பஸ்சேவை இன்று ஆரம்பம்

காரைநகர் பிரதேசத்தில் உள்ளூர் பஸ் சேவை இன்று திங்கட்கிழமை காலை7.30மணிக்குகாரைநகர்துறை முகத்திலிருந்து பாலாவோடை ஊரி வலந்தளை ஊடாக வியாவில் வரை ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கைப் போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இந்த வீதி ஊடான பஸ் சேவை இதுவரை இல்லாமையால் பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள், பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கிவந்தனர். இதற்கமைய கடந்த இருபது வருடங்களாக இடைநிறுத்தப்பட்ட இப் பஸ்சேவை இப்பகுதி மக்களும் பொது அமைப்புக்களும் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கையை அடுத்தே இப்பகுதி ஊடான உள்ளூர் பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஈழத்துச் சிதம்பரத்துக்கான பஸ் சேவையும் நாளை செவ்வாய்க் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. (2-4)

# இராசி பலன்


03-05-2010
(சித்திரை 20, திங்கட்கிழமை)
பஞ்சமி மாலை 6.29 மணிவரை
மூலம் முற்பகல்-7.31 மணிவரை
இராகுகாலம் 7.26.-8.56 மணிவரை
சுபநேரம் 11.56-1.26 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, புதிய திட்டமிடல், பிரயாண சுகம், பயந்த சுபாவம். |
| இடபம் | வீண் தொல்லை, காரிய தாமதம், தனவிரயம், கௌரவக் குறைவு. |
| மிதுனம் | போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல வரவேற்பு, முயற்சி கைகூடும். |
| கடகம் | சத்துரு ஜெயம், தேகநலன், காரியஅனுகூலம், தொழில் விருத்தி. |
| சிங்கம் | வியாபார நன்மை, அமைதிக் குறைவு, முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு. |
| கன்னி | கல்வியில் ஆர்வம், தேவையற்ற பயம், சுபசெலவு, நல்ல முயற்சி. |
| துலாம் | இனிய சம்பவம், கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, பணவருவாய். |
| விருச்சிகம் | கோபப்படுதல், முயற்சி தாமதம், பணவிரயம், தொழில் நன்மை. |
| தனுசு | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை, ஜனவசியம். |
| மகரம் | உணர்ச்சி வசப்படல், சுபகாரியச் செலவு, சயனசுகக் குறைவு, உறவினர் சந்திப்பு. |
| கும்பம் | பொருள் சேர்க்கை, காரிய தாமதம், தொழில் முன் னற்றம், கீர்த்தி. |
| மீனம் | சுபநிகழ்வு, பிறர்உதவி, முயற்சி கைகூடும், புதிய தகவல். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 70 |
| தக்காளி | 100 | 120 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 50 |
| கரட் | 90 | 100 | 90 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | -- | -- | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 55 | 60 | 50 |
| பாகற்காய் | 100 | 120 | 50 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 70 | 80 | 30 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 120 | 130 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |



சியற் அக்கடமியின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட அனிமேசன் கற்கைநெறிகளுக்கான பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.இந்துக் கல்லூரியின் ஆனந்த குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.நிகழ்வில் பெங்களூர் சியற் அக்கடமியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் இராஜேஸ், மக்னெற் அக்கடமியின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுகுணன், கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் இரவீந்திரா ஆகியோர் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- டுசாந்தன்)

# நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 48 வீதிகள் விரைவில் புனரமைப்பு

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 48 வீதிகள் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி உட்கட்டுமான மேம்பாட்டுத் திட்டத்தின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ள இவ்வீதிகள் புனரமைப்புத் திட்டத்திற்கென 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது தெரிவுசெய்யப்பட்ட 48 வீதிகளும் அளவிடப்பட்டு மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் மதிப்பீட்டுப் பணிகள் முடிவடைந்ததும் புனரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# பொன்னாலை சந்தியில் கள்ளுத்தவறணை அசௌகரியத்தை எதிர்நோக்கும் மக்கள்

(காரைநகர்)

காரைநகர் நுழைவாயில் பகுதியான பொன்னாலைச் சந்தியில் புதிதாக கள்ளுத் தவறணை அமைக்கப்பட்டுள்ளதனால் காரைநகர் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொன்னாலைச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட இக் கள்ளுத் தவறணையில் மது அருந்துப்வர்கள் மாலைவேளைகளில் காரைநகருக்கு மோட்டார்சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் பிரயாணம் செய்பவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கும் அதேவேளை காரைநகர் நுழைவாயிலில் இந்த தவறணை அமைத்தமை தொடர்பாக விசனத்தையும் தெரிவித்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட இத்தவறணை தொடர்பாக சங்கானை பிரதேச செயலருக்கும், காரைநகர் உதவி அரச அதிபருக்கும் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (4-246)

# வன்னி இறுதி யுத்தத்தில் கைவிடப்பட்ட ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கடந்த 2009 ஆம் ஆண்டு வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது கைவிடப்பட்ட ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகள் புதிதாக பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இதில் கிளிநாச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய வலயங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களின் சுயவிபரக் கோவை பதிவுகள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா தலைமையில் யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவற்றுள் கிளிநொச்சி 85 ஆசிரியர்களினதும் முல்லைத்தீவு 20 ஆசிரியர்களினதும் துணுக்காய் 17 ஆசிரியர்களினதும் சுயவிபரக் கோவைகளே முதற்தடவையாக புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (2-7)

# அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வி.எச்.ஒழுங்கை இருபாலை கிழக்கு கோப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த ஜெகநாதன் வினோத் என்பவரது தேசிய அடையாள அட்டை (911444062V) கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும். (4)

# சைவ வித்தியா மலர் வெளியீடு

திருநெல்வேலி சைவ வி.வி. சங்கத்தின் "சைவ வித்தியா" மலர் வெளியீடும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவவித்தியா விருத்திச் சங்க ஆராதனை மண்டபத்தில் அதன் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய கல்வி நிறுவக முன்னை நாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சோமசுதந்தரரம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் வழங்கவுள்ளதுடன் வாழ்த்துரையை அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் நல்லூர் பிரதேச சபை செயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "எந்தையும் தாயும்" நாடகமும் இடம்பெறவுள்ளது. (4)

# காரைநகர் பிரதேச சமுர்த்தி அலுவலர்களுக்கான உள்ளக இடமாற்றம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்திற்குள்ளேயே உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம் இடமாற்றம் இன்று திங்கட்கிழமையில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இடமாற்ற உத்தரவின்படி புதிதாக நியமிக்கப்பட்ட பிரிவுகள் வருமாறு,




காரை மேற்கு மற்றும் காரை வடமேற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளிற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக திருமதி பா. சிவனேஸ்வரியும், காரை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவுக்கு சி.கெங்காதரனும் காரை தெற்கு மற்றும் காரைதென்கிழக்கு கிராமசேவையாளர் பிரிவுகளிற்கு செல்வி ச.நவமணியும், காரை தென்மேற்கு கிராமசேவையாளர் பிரிவுக்கு செல்வி க.மகாலக்ஷ்மியும், காரை வடக்கு கிராமசேவையாளர் பிரிவுக்கு திருமதி சோ. அருளாம்பிகையும், காரை வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு திருமதி மு.சாந்தினிதேவியும், காரை மத்தி கிராமசேவையாளர் பிரிவுக்கு திருமதி செ. தேவமலர் ஆகியோரும் இடமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-246)

# தேசிய டெங்குக்கட்டுப்பாட்டு வாரம்

நாடு முழுவதிலும் தற்போது பருவகால மழை பெய்து வருவதனால் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு மத்திய சுகாதார அமைச்சினால் இன்று முதல் 9ஆம் திகதிவரையான வாரத்தினை தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலும் பல பகுதிகளிலும் மழைபெய்து வருவதனால் இங்கும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்கலாம். மேலும் யாழ்.குடாநாட்டிற்கு தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

அதேபோன்று குடாநாட்டில் இருந்தும் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தென் பகுதிக்கு சென்று வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் டெங்கு நோயின் பரம்பல் யாழ். மாவட்டத்தில் மிக மோசமாக அதிகரிக்கலாம்.

எனவே யாழ். மாவட்டத்திலும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அடுத்த வாரத்தில் தீவிரப்படுத்த வேண்டும். இவ் வாரத்தில் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

1.ஒவ்வொரு பாடசாலையிலும் சிரமதான பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்படவேண்டும்.
2.ஒவ்வொரு நிறுவனத்திலும் திணைக்களத்திலும் ஊழியர்களின் பங்களிப்புடன் சிரமதானப்பணி இடம்பெறவேண்டும்.
3.ஒவ்வொரு தனியார் கல்வி நிலையமும் உரிமையாளர்களால் உடனடியாக துப்புரவு செய்யப்படவேண்டும்
4.பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் உடனடியாக கிரமமாக துப்புரவு செய்யப்படவேண்டும்.
5.மத வணக்கத்தலங்கள் சம்பந்தப்பட்ட பரிபாலன சபையினரால் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
6.கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள் தத்தமது கிராம மட்டத்தில் சிரமதானப் பணி மூலம் சுத்திகரிப்புப் பணி மேற்கொள்ளப்படவேண்டும்.
7.உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக்கழிவுகளை கிரமமாக அகற்றி சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
8.கழிவுநீர் வடிகால்களில் நீர் தேங்காதவாறு தினமும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.
9.வீதியோரங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் உடனடியாக துப்புரவு செய்யப்பட வேண்டும்.
10.ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் குடியிருப்பாளரும் தத்தமது வீட்டு வளாகத்தில் சுத்திகரிப்பு பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் வேண்டும்.

இச் செயற்பாடுகளை அடுத்த ஒரு வார காலத்திற்குள் முன்னெடுத்துடெங்கு நோயை கட்டுப்படுத்த ஒத்துழைக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றேன்.

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
**பிராந்தியப் பணிப்பாளர் ,சுகாதார சேவைகள் ,யாழ்ப்பாணம்.**

# நளினி-பிரியங்கா சந்திப்பு குறித்த விடயங்களை வெளியிடவேண்டும்

## பொன்.ராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார்



(கடலூர்)

வேலூர் மத்திய சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும், ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளி நளினியை, ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா சந்தித்துப் பேசிய விபரங்களை அரசு வெளியிடவேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு பொன்.ராதா கிருஷ்ணன் கேட்டுள்ளார்.

கடலூரில் சனிக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியது, நளினியுடன் பிரியங்கா சந்தித்துப் பேசிய பின்னர்தான் இலங்கையில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எனவே அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விபரத்தை அரசு வெளியிட வேண்டும்.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் தாயாருக்கு தமிழகத்தில் மருத்துவ



சிகிச்சை அளிக்க மறுத்தது இந்திய மக்களுக்கே பெரிய தலைக் குனிவை ஏற் படுத்தி விட்டது.

இது மனிதாபிமானமற்ற செயல். இந்திய அரசு அவரது மருத்துவ சிகிச்சைக்கு அனுமதி அளிக்கவேண் டும். அவரது வருகையால் இந்தியாவில் தீவிரவாதம் தோன்றி, சட்டம் ஒழுங்கு பாதிக்கும் என்றால் அதைக் கண்காணிக்க வேண்டியது மத்திய மாநில அரசுகளின் கடமையாகும் . தி.மு.க. தமிழ்ச் சமுதாயத்துக்கே எதிராகச் செயல் படுகிறது என்றார். (2-4)

# சிரஞ்சீவிக்கு அரசியல் கட்சி தலைவருக்கான தகுதி கிடையாது

## நடிகை விஜயசாந்தி



(ஐதராபாத்)

சிரஞ்சீவிக்கு அரசியல் கட்சித் தலைவருக்கான தகுதி இல்லை என நடிகையும், எம்.பி.யுமான விஜயசாந்தி குற்றம்சாட்டினார்.

ஐதராபாத்தில் பத்திரிகையாளர்களிடம் நடிகையும், தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி எம்.பி.யுமான விஜயசாந்தி கூறியதாவது,

பிரஜா ராஜ்ஜியம் கட்சித்தலைவர் சிரஞ்சீவி அரசியலுக்கு வந்துவிட்டாரே தவிர அவருக்கு எந்தவித இலட்சியமும் இல்லை.

ஆனால், அக்கட்சி மக்களால் ஒதுக்கப்பட்ட கட்சி. பலசரக்குக் கடை போன்று சிரங்சீவியும் தனது கட்சியின் கடை தெலுங்கானா பகுதியில் செயல்பட்டது. தற்போது மக்களால் மூடப்பட்டுவிட்டது. இனி ஆந்திரா, ராயலசீமா பகுதிகளிலும் அக்கட்சிக்கு விரைவில் மூடு விழா நடத்தப்படும்.

பிரஜா ராஜ்யம் கட்சியில் உள்ள மகளிர் தலைவர்களுக்கு நாகரிகம், கலாசாரம் என்பது இல்லை. அது ரவுடிகளின கட்சியாகவே இருந்து வருகிறது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி. லகடபாடி ராஜகோபால், சிரஞ்சீவியுடன் சேர்ந்து தெலுங்கானா பகுதியில் சுற்றுப் பயணம் செய்வது திருடர்கள் ஒன்று சேர்ந்து கைகோர்த்து நிற்பது போல் உள்ளது. இவ்வாறு விஜயசாந்தி ஆவேசமாக தாக்கிப் பேசினார். (2-4)




# கார் விபத்தில் நடிகை மனோரமா காயம்



நடிகை மனோரமா கடந்த வெள்ளிக்கிழமை திருப்பதி சென்றார். ஏழுமலையானை தரிசனம்செய்தார். வேண்டுதல் நிறைவேற மொட்டை போட்டார். பின்னர் தனது தங்க நகைகளை காணிக்கையாக கோவில் உண்டியலில் போட்டார். தரிசனம் முடிந்த பிறகு நேற்றுமுன்தினம் அதிகாலையில் காரில் சென்னை திரும்பினார்.

தமிழக எல்லையில் உள்ள கீர்த்தளம் என்ற இடத்தில் கார் வந்துகொண்டிருந்தது. அப்போது முன்னால் சென்று கொண்டிருந்த லொறியை முந்தி செல்வதற்காக சாரதி காரை திருப்பினார். அப்போது கார் டிரைவரின் கட்டுப்பாட்டை மீறி வீதியில் கவிழ்ந்தது. இதில் நடிகை மனோரமாவும் அவருடன்வந்தவர்களும் காருக்குள் சிக்கிக் கொண்டனர்.

கிராமமக்கள் விரைந்து வந்து காருக்குள் இருந்தவர்களை மீட்டனர். இந்தவிபத்தில் மனோரமா காயம் அடைந்தார். அங்குள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்ற பின்னர் சென்னை திரும்பினார். (2-4)

# ஆசியாவின் நுழைவாயிலாக சென்னை திகழ்கின்றது

## ஜப்பானிய அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

ஆசிய நாடுகளின் நுழைவு வாயி லாக சென்னை திகழ்கிறது என்று ஜப்பான் நாட்டு தொழில்துறை அமைச்சர் கூறியுள் ளார்.

தமிழக ஜப்பான் தொழில் துறை யின் கூட்டு ஆலோசனைக் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் துணை தமிழக முதல்வர் ஸ்டாலின், ஜப்பான் நாட்டு தொழில் துறை அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் மற்றும் தமிழக தொழில்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய ஸ்டாலின், முதல்வர் கருணாநிதியின் கோரிக்கையை ஏற்று சென்னையில் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் அலுவலகத்தை திறந்து வைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஜப்பான் நாட்டை சேர்ந்த நிறுவனங்கள் தமிழகத்தில் மேலும் முதலீடுகள் செய்ய வேண்டும். தமிழகத்தில் 170 நிறுவனங்கள் தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றன என்றார்.

தொடர்ந்து பேசிய ஜப்பான் நாட்டு தொழில்துறை அமைச்சர் ஆசிய நாடுகளின் நுழைவு வாயிலாக சென்னை திகழ்கிறது என்றார் . (2-4)

## மும்பை தாக்குதல் வழக்கில்

# பாகிஸ்தான் தீவிரவாதி கசாபுக்கு இன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ளது

மும்பைத் தாக்குதல் வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பாகிஸ்தான் தீவிரவாதிகள் 10பேர் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மும்பையில் தாக்குதல் நடத்தினர். இதில் சுமார் 200 பேர் பலியானார்கள். இத் தாக்குதலில் ஈடுபட்ட பாகிஸ்தான் தீவிரவாதி அஜ்மல் கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டான்.

அவன் உள்ளிட்ட தீவிரவாதிகளுக்கு வரைபடம், தாக்குதல் நடந்த இடங்களைப் பற்றிய விபரங்கள் ஆகியவற்றை அளித்ததாக, இந்தியாவைச் சேர்ந்த பாகிம் அன்சாரி, சபாவுதின் அகமது ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். நாட்டுக்கு எதிராக போர் தொடுத்ததாகவும், குற்றச்சதியில் ஈடுபட்டதாகவும் 3பேர் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

166 பேரைக் கொன்றதாகவும், 300 பேரைக் காயப்படுத்தியதாகவும் கசாப் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பலத்த பாதுகாப்பு நிறைந்த மும்பை ஆர்தர் ரோடு ஜெயிலில் கசாப் அடைக்கப்பட்டுள்ளான். அங்கு அமைக்கப்பட்டுள்ள தனி நீதிமன்றில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டது. மார்ச் 31 ஆம் திகதி விசாரணை முடிவடைந்து, தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், இவ்வழக்கில் தனிக்கோட்டு நீதிபதி எம்.எல்.ஹாலியானி நாளை தீர்ப்பு அளிக்கிறார். இதற்காக ஆர்தர்ரோடு ஜெயிலைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. கசாப் உள்ளிட்ட மூவரும் குற்றவாளியா? இல்லையா? என்பது பற்றி மட்டுமே இன்று தீர்ப்பு அளிக்கப்படவுள்ளது. (2-4)

# பொதுத்துறை, கலைத்துறையில் இருந்து விலகமுடியாது - கலைஞர் உருக்கம்



பெண்சிங்கம் திரைப்பட பாடல் குறுந்தகடு வெளியீட்டு விழாவில் கலைஞர்.

(சென்னை)

பொதுவாழ்க்கை மற்றும் கலைத் துறையில் இருந்து விடுபட இயலாத நிலையில் தாம் உள்ளதாக முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார். இத்துறைகளில் தொடர்ந்து தமக்கு அழைப்பு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பெண் சிங்கம் படத்துக்கு முதல்வர் கருணாநிதி திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதியுள்ளார். இப்படத்தின் பாடல் குறுந்தகடு வெளியீடு விழா சென்னை சத்யம் திரையரங்கில் நடைபெற்றது. பாடல் குறுந்தகடை முதல்வர் கருணாநிதி வெளியிட அதை நடிகர் கமல் பெற்றுக்கொண்டார்.

விழாவில் பேசிய முதல்வர் கருணாநிதி, கலையுலக வாழ்வில் தொடக்கக் காலத்தில் எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. மந்திரி குமாரிக்கு பிறகு எம்.ஜி.ஆர்,.சிவாஜி மற்றும் என்.எஸ்.கிருஸ்ணன் நட்பு கிடைத்தது. அவர்களை இன்றுவரை நான் மறக்கவில்லை. புதிய சட்டமன்ற வளாகத்தில் அவரின் பெயரில் கலைவானர் அரங்கம் கட்டப்பட்டு வருகிறது.

நான் வாழ்ந்த இந்த 86 ஆண்டு காலத்தில் இடையிடையே ஏற்பட்ட துன்பங்கள் போதாதா. என்னால் ஏற்பட்ட நல்ல விளைவுகளை, என்னால் ஏற்பட்ட நல்ல நிலைமைகளை ஏழையின் சிரிப்பில் இறைவனை காண் போம் என்று சொன்ன அண்ணாவின் கொள்கையை நிறைவேற்றி கொண்டிருக்கிறோமே அது போதாதா.

சாதனைகள் போதாதா இன்னும் சாதனைகள் செய்ய இன்னும் பல செயல்களை புரிய மற்றவர்கள் வரக்கூடாதா என்றெல்லாம் நான் எண்ணுகிற அதே நேரத்தில் எனக்கு நீங்கள் என்னை போகச் சொன்னாலும் போகமனமில்லாத ஒரு துறை உண்டு என்றால் அது பொதுத்துறை சம்பந்தப்பட்ட அரசியல் துறை மாத்திரமல்ல கலைத் துறையும் கூட. திரைப்படத் தொழிலாளர்களுக்கு வீட்டு எளமனை ஒதுக்கீடு செய்யும் அளவுக்கு என்னை உயர்த்தியவர்கள் திரையுலகைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் என்றார். (2-4)

# நக்ஸலைட்டுகளால் நாட்டுக்கு மிகப் பெரிய சோதனை

## ப.சிதம்பரம் கவலை தெரிவிப்பு



(கோவை)

நக்ஸலைட்டுகளின் சவாலால் இந்தியாவுக்கு மிகப்பெரிய சோதனை ஏற்பட்டு வருகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் வேதனையுடன் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் சேவாதளம் சார்பில் நடைபெற்ற 6 நாட்கள் பயிற்சி முகாம் நிறைவு நிகழ்ச்சி கோவை போத்தனூர் பி.வி.ஜி.திருமண மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் பயிற்சி பெற்ற தொண்டர்களுக்கு சான்றிதழை வழங்கி சிதம்பரம் பேசிய போது, 6 மாநிலங்களில் இருக்கும் நக்ஸலையிடுகளின் சவால்களால் நாட்டுக்கு மிகப்பெரிய சோதனை ஏற்பட்டுள்ளது. இந்த சவால்களையும் முறியடிப்போம். அச்சுறுத்தல்களுக்கு இடம் கொடுக்காமல் மன உறுதியுடன் செயல்படுவது அவசியம் என்றார். (2-4)



தமிழரசுக்கட்சியின் மேதினக் கூட்டம் நேற்று முன்தினம் தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விவசாய சங்கங்களின் சம்மேளனத் தலைவர் செ.ரகுநாதன் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறில் , பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் ,மாவை சேனாதிராசா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## யுத்த தந்திரோபாயங்கள் குறித்து பாக்.அதிகாரிகளுக்கு இலங்கை விளக்கம்

(கொழும்பு)

பாகிஸ்தான் படையதிகாரிகளுக்கு யுத்த தந்திரோபாயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவம் வான் படை மற்றும் கடற்படையைச் சேர்ந்த உயர் அதி காரிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள் ளனர்.

குறிப்பாக இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இலங்கை அரசாங்கப்படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக பயன்படுத் திய யுத்த தந்திரோபாயங்கள் பற்றி விளக்க மளிக்கப்பட்டுள்ளது.

அதில் தீவிரவாத நடவடிக்கைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர் பில் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மற் றும் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ ஆகியோர் விளக்க மளித்துள் ளனர்.

இரு நாடுகளும் எதிர்நோக்கி வரும் பாது காப்பு அச்சுறுத்தல்கள் குறித்து இந்த சந் திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் இடம்பெற்ற 80 தற்கொலைக் குண்டுத் தாக் குதல்களில் 1018 பேர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)

## விழாக்களுக்கான அனுமதி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதிகளில் இடம் பெறும் ஆலய விழாக்களில் ஒலிபெருக்கி பாவனை க்கானதும் கலை நிகழ்வுக்ள இடம் பெறுவ தற்கான அனுமதியும் அப் பகுதி பொலிஸா ரினால் வழங்கப்படுகிறது.

இருப்பினும் சில ஆலயங்களில் விடிய விடிய திருவிழா செய்ய அனுமதியளிக் கப்படுவதாகவும் சில பகுதிகளில் இரவு 10 மணியுடன் விழாக்களை முடிக்குமாறும் பணிக்கப்படுவதாக அப்பகுதி ஆலயங்க ளின் விழாக்குழுவினர் கவலை தெரிவித் துள்ளனர். (2)

### கடற்படையால் கைது செய்யப்பட்ட

## அவுஸ். செல்லமுயன்ற 110 பேருக்கு அபராதம், ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

சட்டவிரோதமான முறையில் அவுஸ்தி ரேலியாவை நோக்கிச் சென்று கொண்டி ருந்த போது கடற்படையினரால் கைது செய் யப்பட்ட 110 பேரையும் மாத்தறை நீதிமன்றம் தலா 20 ஆயிரம் ரூபா அபராதமும் ஆறு மாத காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதித்து கடந்த வெள்ளி விடு தலை செய்தது.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் இவர்கள் காலி கடற்பரப்பில் வைத்துக் கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் வெள்ளியன்று மாத்தறை பிரதம நீதிவான் உதேஷ் ரண துங்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து தலா 20 ஆயிரம் ரூபா அப ராதமும் ஆறுமாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.(2-4)

## பவளப் பாறைகள் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது

### கரையோர பாதுகாப்பு திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை சூழவுள்ள சில பகுதிகளில் உள்ள பவளப்பாறைகள் அழிவடையும் அபா யம் ஏற் பட்டுள்ளதாக கரையோர பாதுகாப்பு திணைக் களம் தெரிவித்துள்ளது.

மக்களின் கவனயீனம் மற்றும் அறியாமை காரணமாக பவளப்பாறைகள் அழிவடைவ தாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். இந்த நிலைமையை தடுப் பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக அவர் கூறினார்.

இதற்கமைய பவளப்பாறைகளை பாது காக்க வேண்டியதன் அவ சியம் குறித்து மக் களுக்கு தெளிவுபடுத்துவது உள்ளிட்ட விசேட பாதுகாப்பு திட்டங்கள் அமுல்படுத்தப் படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

## வடக்கு-கிழக்கு வைத்தியசாலைகளுக்கு புதிய வைத்திய அதிகாரிகள் நியமனம்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

புதிதாக 770 வைத்திய நியமனங்கள் வழங்கும் நிகழ்வு சுகாதார அமைச்சர் மைத் திரிபால சிறிசேன தலைமையில் இன்று நடைபெறுகிறது. இவ் வைத்திய நியமனம் பெறும் வைத்திய அதிகாரிகள் நாட்டிலுள்ள 48 வைத்திய சாலைகளில் சேவையில் அமர்த்தப்படுவார்கள் என பிரதிசுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ரெலன்ஸ் காமினி டிசில்வா கூறினார்.

மேலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் புதிய வைத்தியஅதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். குறிப்பாக யாழ்ப் பாணம்,வவுனியா,திருகோணமலை,கல்முனை மற்றும் அம்பாறை ஆகிய பகுதிக ளில் உள்ள வைத்திய சாலைகளில் இந்த வைத்திய அதிகாரிகள் சேவையில் அமர்த் தப்படவுள்ளனர். இன்று வைத்திய நியமனம் பெறுபவர்களில் வெளிநாடுகளில் மருத்துவ பட்டப்படிப்பை பூர்த்தி செய்த 44 பேரும் உள்நாட்டில் மருத்துவ பட்டப்படிப்பை பூர்த்தி செய்த 7726பேரும் அடங்குகின்றனர். (2-4)

## இலஞ்ச,ஊழல்மோசடி விசாரணைகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

### லக்ஸ்மி ஜயவிக்கிரம தெரிவிப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் மோசடி குறித்த முறைப் பாடுகளைவிசாரணைசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மி ஜயவிக்கிரம தெரிவித்துள் ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விற்கு அதிகாரிகளை நியமிக்க முடி யாத காரணத்தினா லேயே விசார ணைகளை முன்னெடுக்க முடிய வில்லை என அவர் குறிப்பிட்டுள் ளார்.

ஆணைக்குழுவின் பதிவுக் காலம் கடந்த மார்ச் மாதம் முதல் இது வரையில் சுமார் 500 இலஞ்ச ஊழல் மோசடி குறித்த முறைப் பாடு கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனினும் இவை தொடர்பில் விசார ணைகளை முன் னெடுக்கக் கூடிய சட்டப் பின்னணி கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

17ஆவது திருத்தச் சட்ட மூலத் தின் அடிப்படையில் ஆணைக் குழுவிற்கான பதவி நிய மனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.ஊழல் மோசடி தொடர்பான ஆயிரத்து ஐந் நூறு முறைப்பாடுகள் விசா ரணைகள் செய்யப்படாது நிலுவை யிலிருப் பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசியல்வாதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாட சாலை அதிபர்கள், சுகாதாரத் துறை ஊழியர்கள் என பல்வேறு தரப்பினரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது. (2-4)


**31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை**

**அழைப்பும் நன்றி நவிலலும்**

**(03.05.2010 திங்கட்கிழமை)**

**அமரர் சபாபதிப்பிள்ளை கயிலாசபிள்ளை**

தோற்றம் 03 11 1928



மறைவு 03 04 2010

அன்பின் ஒளிவிளக்கே பாசத்தின் கோயிலே
பழகியோர் போற்றும் பண்புத் தெய்வமே
அராலியூர் அகல்விளக்கே அழியாத ஓவியமே
விழிபோல் எம்மை துளிகூட துன்பமிலாது
கனிவான வார்த்தைகளால் காலமெலாம் எமைச் சுமந்து
கோலாகல வாழ்வதனை இவருக்கும் ஆக்கித் தந்த
அப்பாவே அலைகடல் துரும்பாகி அலையவிட்டு
எங்கு சென்றீர் அப்பா எமைவிட்டு ஏன் பிரிந்தீர்

எமது தகப்பனாரின் மரணச் செய்தி கேட்டு
உடன் வந்து உதவியோருக்கும் நேரில்
வருகை தந்து அனுதாபத்தை தெரிவித்து
ஆறுதல் கூறிய உற்றார் உறவினர் நண்பர்கள்
அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து
இரங்கலுரை நிகழ்த்தியோருக்கும் எமது
இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன்

அன்னாரின் இல்லத்தில் 03.05.2010 மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உப தபாற் கந்தோர் வீதி,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை

-பிள்ளைகள்.

(சி-189)

# 21 ஆம் நூற்றாண்டில் ஆசிரியர் எதிர்பார்ப்புகளும் - இடர்பாடுகளும்

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப்பேருரை

### அறிமுகவுரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற பேராசிரியர் ப.சந்திரசேகரன் நினைவுப்பேருரையில் '' 21 ஆம் நூற்றாண்டில் ஆசிரியர் – எதிர்பார்ப்புகளும் இடர்ப்பாடுகளும்'' என்ற பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி அனுஷ்யா சத்தியசீலன் ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகின்றது. (ஆ-ர்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒன்பதாவது ஆண்டு நிறைவையொட்டி வருடாவருடம் நடைபெற்று வருகின்ற கல்விப் பெறுமானம் மிக்க நினைவுப் பேருரை வரிசையில் முதலாவது பேருரையாக இடம்பெறுகின்ற பேராசிரியர் பத்தகுட்டி. சந்திரசேகரம் அவர்களின் நினைவுப் பேருரை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று இடம்பெறுகின்றது.

எமது மண்ணின் சான்றோர்களெனப் போற்றப்படக்கூடிய பலர் தமது அளப்பரிய ஆற்றல்களினாலும், செயற்கரிய செயல்களினாலும் கல்விப் புலத்திற்கு உரம் இட்டு வந்துள்ளார்கள். அவை இன்றைய சமுதாயத்தினரிடையே பிரதிபலிப்பாக விளங்கி வருகின்றன. எதிர்காலத்திலும் அவ்வாறே விளங்கவேண்டும் என்பதற்கமைய அறிஞர்களின் செயல்களையும், சிறப்புக்களையும் தெரியப்படுத்தி, அவர்களையும் அவர்களது சேவைகளையும் மதிக்கும் வகையிலும் கல்வி உயர்விற்கு வளம் சேர்க்கும் வகையிலும் நினைவுப் பேருரைகள் எமது கல்லூரியில் வருடாவருடம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புகழ் பூத்த கிராமங்களில் ஒன்றான மண்டூரில் பிறந்த பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்கள் மண்டூர் இராமகிருஸ்ண சங்க ஆரம்பப் பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியை திருகோணமலை இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியவற்றிலும் கற்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர்.

இணுவில் பகுதியில் திருமணம் செய்துகொண்ட பேராசிரியர் அவர்கள் முதன் முதலாக ஆசிரியப் பணியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் மேற்கொண்டார். கல்விக்கும் தமிழுக்கும் சேவையாற்றுவதில் விருப்புக்கொண்ட பேராசிரியரது அயராத முயற்சியின் விளைவாக 1961 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வியியற் துறை விரிவுரையாளராக இணைந்து பணியாற்றினார். லண்டன் கல்வியியற் கழகத்தில் (London Institute of Education) முதுமாணி ஆய்வுப்பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர் தனது ஆய்வு விருப்பின் காரணமாக லண்டன் பல்கலைக் கழகத்தில் '' கல்வியில் இராமகிருஷ்ண வேதாந்த சிந்தனைகள்'' பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். இவ்வாய்வானது இவரிடம் ஆன்மீகத்துறையிலும் ஆழமான ஈடுபாட்டை ஏற்படுத்தியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் கல்வியியல் துறை ஒன்றினை ஆரம்பிக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் விருப்பினைக் கருத்திற்கொண்டு, பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டதன் விளைவாக 1980.10.15 ஆம்திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்வியியற் துறையில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தனது பணியினை சிறப்புற ஆற்றியதன் விளைவாக கல்வியியற் பேராசிரியராக உயர்வு பெற்று கல்விக்கும் தமிழுக்கும் நற்பணியாற்றினார்.

இன்று பல்கலை மட்டத்தில் இடம்பெறும் தமிழ் மொழியிலான பட்டப்பின்படிப்பு, முதுகல்விமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி போன்ற பட்டங்களை தமிழ் மக்கள் பெற்று உயர்வு பெறுவதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் பேராசிரியர் என்பதை நாம் ஒவ்வொருவரும் மறந்துவிடல் ஆகாது. இந்த வகையில் தமிழ் மொழிக்கு உயர் கல்வி நிலையில் இன்று உலகில் உயரிய அந்தஸ்து கிடைப்பதற்கு பெரு விருப்புடன் செயற்பட்டவர். சுயபாசை – தாய்மொழிக் கல்வி என்பன அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். தனித்தமிழ் பல்கலைக்கழகம் எமது மண்ணில் உருவாக்கப்படவேண்டும் என்ற அவாவுடன் பல செயற்பாடுகளை முன்வைத்தவர்.

பேராசிரியர் அவர்கள் கல்வித்தத்துவம், கல்விக் கோட்பாடுகள் ஆகிய துறைகளில் கற்பித்தலையும், ஆய்வுகளையும் மேற்கொண்டதுடன், லண்டன் பல்கலைக் கழகம், மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகம், கர்நாடகப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அதிதிப் பேராசிரியராகவும், வெளிநிலை ஆய்வு மேற்பார்வையாளராகவும் பணியாற்றி புகழைத் தேடிக்கொண்டவர். எமது நாட்டிலும் அவ்ரிடம் பட்டப்பின் கல்வித்தகைமை நெறியில் கற்றவர்கள், முதுமாணி, கலாநிதி பட்டங்களுக்கான ஆய்வினை மேற்கொண்டு பயன்பெற்றவர்கள் பலர். அதுமட்டுமல்லாது பல்கலைக் கழகப் பதவிக்கு அப்பாலும் பரந்துபட்ட கல்விப் பணியாற்றி சிறந்த நன் மாணாக்கர் பரம்பரையொன்றை உருவாக்கிய நல்லாசானும் ஆவார்.

இவ்வாறான பெருமையினையும் சிறப்பினையும் கொண்டு புகழ்பெற்ற முதற் தலைவராக கல்வியியற் துறையில் பணியாற்றிய கல்விமானான பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களின் நினைவுப் பேருரையை இன்று அத்துறையில் பணியாற்றி வருகின்ற கலாநிதி. அனுசியா சத்தியசீலன் அவர்கள் ஆற்றுவது சாலப் பொருத்தமானதாகும்.

கலாநிதி.சத்தியசீலன் அவர்கள் வரலாற்றுப் பெருமைமிக்க கோணேஸ்வரம் ஆலயம் அமைந்துள்ள திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை சென்மேரிஸ் திருக்குடும்பக் கன்னியர்மடத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையிலும் கற்றுத் தேர்ந்தவர். தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பினை மேற்கொண்டு வரலாற்றுத்துறையில் சிறப்புப் பட்டதாரியாகி ஒரு வருடம் தற்காலிக விரிவுரையாளரகாவும் பணியாற்றினார். அதன் பின்னர் முல்லைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரிய நியமனம் பெற்று சேவை புரிந்தார். தொடர்ந்து ஆசிரியப் பணியினை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் மேற்கொண்டார். இக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் பட்டப்பின் படிப்பினை மேற்கொண்டு விசேட சித்தியினைப் பெற்றார்.

இவரது திறமையின் வெளிப்பாடாக 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியற் துறையில் நிரந்தர விரிவுரையாளராக இணைந்துகொண்டார். சேவையை ஆற்ற முடியும் என்பதில் நம்பிக்கையுடைய இவர் தனது கல்விப் பணியுடன் முதுதத்துவமாணி ஆய்வினை மேற்கொண்டு 1999 ஆம் ஆண்டு நிறைவு நிறைவு செய்தார். தனது சேவையிலும் கல்வியிலும் படிப்படியான உயர்ச்சிகளைப் பெற்றதுடன் மட்டுமல்லாது தனது பதவியிலும் 2001 ஆம் ஆண்டு சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்2இனைப் பெற்றும் 2007 ஆம்ஆண்டிலிருந்து சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 இலும் உயர்வு பெற்றுள்ளார். இவர் தனது கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொள்வதற்காக இந்தியாவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் "Mother tongue in higher Education policies and practices in Tamil Nadu & Srilanka since 1950' என்னும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு 2005 ஆம் ஆண்டு பூர்த்தி செய்தார்.

இவ்வாறாக தமது கல்வியில் உயர் தகைமைகளை வளர்த்து கல்விப் புலத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பதுடன் யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தின் கல்விப் பண்பு சார் பணிகளிலும் பணியாற்றி வருகின்றனர். கல்விப்பின் பட்டப்படிப்பு, கல்வி முதுமாணி, முதுகலைமாணி (சனத்தொகை கல்வி) போன்ற துறைகளில் விரிவுரைகளை மேற்கொர்ண்டு வருவதுடன். முது தத்துவமாணி கலாநிதிப்பட்ட ஆய்வுகளின் மேற்பார்வையாளராக வும் செயலாற்றி வருகின்றார். இவர் கல்வித்துறையில் காட்டிய ஆழமான ஈடுபாட்டின் விளைவாக மனைப் பொருளியல் துறையின் இணைப்பாளராக கடமையாற்றுவதுடன் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் மேற்கொள்ளப்பட்ட பட்டப்பின் கல்வியின் விரிவுரைகளை மேற்கொண்டு பரந்துபட்ட சேவையினையும் ஆற்றிவருகின்றார். இவ்வாறான கலாநிதி திருமதி சத்தியசீலன் அவர்களின் கல்வி உயர்வு பதவிச் சிறப்பு என்பவற்றிற்கு இவரது துணைவர் பேராசிரியர் சத்தியசீலன் அவர்களது அறிவு சார் திறன்களின் வளர்ச் சியும் அணிசெய்வதாக அமைகின்றது என லாம். கலாநிதி சத்தியசீலன் ஆற்றவுள்ள "21ஆம் நூற்றாண்டில் ஆசிரியர் – எதிர்பார்ப்புக்களும் இடர்பாடுகளும்'' என்ற நினைவுப் பேருரையானது முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு மிகவும் அவசியமானதாகும். (தொடரும்)

**திருமதி .ஜெயமலர் தியாகலிங்கம்**
உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## நாட்டின் சனத்தொகையில் ஆண்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற கடந்த 30 வருடங்களில் நாட்டின் சனத் தொகையில் ஆண்களின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி யுத்தம் ஆரம்பிக்கப்படும் முன்னர், 50.1 வீதமான காணப்பட்ட ஆண்களில் எண்ணிக்கை, யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் 47.6 ஆக வீழ்ச்சியடைந்து காணப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடங்களில் சனத்தொகை எண்ணிக்கையில் பெண்களின் எண்ணிக்கையானது 49.9 முதல் 52.4 வீதமாக அதிகரித்துள்ளது.

அத்துடன் கடந்த 30 வருட காலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்த பெண்களின் எண்ணிக்கையானது 18 வீதமாக அதிகரித்துள்ளதுடன் இதில் ஆண்கள் 8 வீத வளர்ச்சியைக் கொண்டுள்ளனர் என அந்தப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (2-4)

## தேசிய சேமிப்பு வங்கிக் கிளை திறப்பு

தேசிய சேமிப்பு வங்கியின் கிளை பொன்னாலை வீதி, சங்கானையில் இன்று திங்கட் கிழமை காலை 10.20 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி கிளையை தேசிய சேமிப்பு வங்கித் தலைவர் எஸ்.ஆர்.ஆட்டிகல திறந்து வைக்கவுள்ளார். (4)

## அரசாங்க இரகசிய சட்டமூலத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது

### திவயின செய்தி

(கொழும்பு)

அரசாங்க இரகசியங்களைப் பேணும் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு இரகசியங்களை வெளிநாடுகளுக்கு அறிவிப்பதனை தடுக்கும் நோக்கில் இந்த சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

இவ்வாறு அரச இரகசியங்களை வேறு நபர்களுக்கு வெளியிடுவோருக்கு எதிராகக் கடுமையான தண்டனை விதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னி இராணுவ நடவடிக்கைகளின் போதும், அதன் பின்னரும் சில சக்திகள் ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் வெளிநாட்டுத்தூதுவர்கள் ஆகியோருக்கு உள்நாட்டு இரகசியங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக வும் சட்ட மூலத்தில் காணப்படும் குறைபாடுகளினால் இவ்வாறு தகவல்கள் வெளியாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வாறு அரசாங்க இரகசியங்களை வெளியிட்ட சில இராணுவ அதிகாரிகள் தற்போது பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் தஞ்சமடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (2-4)














இலங்கை மின்சாரசபை ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டு சங்க மின்ஒளி நூல் வெளியீட்டுவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மின்சாரசபையின் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தம் சிறப்புரையாற்றுவதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற மேலதிக பொதுமுகாமையாளர் வே.இராஜேந்திரன் "மின் ஒளி" நூலின் முதற் பிரதியை இ.ச.பேரம்பலம் நிறுவனப் பிரதிநிதியிடம் வழங்குவதையும், சிறப்புப் பிரதியை பொறியியலாளர் ஆர்.பார்த்தீபன் பெற்றுக்கொள்வதையும், 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவரின் பிள்ளை ஒருவர் கௌரவிக்கப்படுவதையும், கௌரவிக்கப்பட்ட அங்கத்தவர்களையும் படங்களில் காணலாம்.

### யுத்தம் காரணமாக

## நாள் தோறும் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் உயிரிழக்கின்றனர்

(கொழும்பு)

நாள்தோறும் வெளிநாடுகளில் பணி புரியும் இலங்கையர்கள் உயிரிழப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் உலகின் ஏனைய பாகங்களில் பணியாற்றி வரும் இலங்கையர்கள் பல்வேறு காரணிகளினால் இவ்வாறு உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் பணியாற்றி வரும் இலங்கையர் உயிரிழப்பது தொடர்பான சம்பவங்கள் நாள்தோறும் பதிவாகுவதாகவும் உயிரிழப்பவர்களில் பெரும்பான்மையானாவர்கள் பெண்கள் எனவும், அநேகமானவர்கள் வீட்டுப் பணிப்பெண்களாகக் கடமையாற்றியவர்கள் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு உயிரிழப்போரது உடலை இலங்கைக்குக் கொண்டு செல்வதில் அதிகாரிகள் கூடுதல் முனைப்புக் காட்டவதில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய மாதம்தோறும் வெளிநாட்டில் பணி புரிந்து உயிரிழப்போர் தொடர்பான 40 சம்பவங்கள் பதிவாவதாக வெளிவிவகார அமைச்சின் தூதுவராலயப் பிரிவுப் பொறுப்பதிகாரி சோமதாச விஜேசுந்தர தெரிவித்துள்ளார். இந்த ஆண்டின் முதல் நான்கு மாதத்தில் மட்டும் 150 இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழப்பவர்களில் அதிகமானோரது மரணங்கள் சந்தேகத்தை தோற்றுவிக்கும் வகையில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தேசிய வருமானத்தில் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் காத்திரமான பங்களிப்பினை நல்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-4)

## பரீட்சை விண்ணப்பம்

(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சின் கீழ் உள்ள ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் வடக்கு- கிழக்கு மகாணங்களைச் சேர்ந்த ஆண் -பெண் இருபாலாரிடமிருந்து (16-22 வயது) தமிழ்மொழி மூலம் ஒன்றும் சிங்கள மொழி மூலம் ஒன்பது பாடநெறிகளுக்குமாக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலையிலும் வேறு மாவட்டங்களில் நூறு பேருக்கு மேல் விண்ணப்பித்தால் அங்கும் பரீட்சை நடைபெறும். விண்ணப்ப முடிவு திகதி 4.6.2010 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் முக்கியமான எட்டுப் பாட நெறிகள் சிங்கள மொழி மூலம் நடைபெறுவதால் தமிழ்மொழிமூலம் கல்வி கற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.போக்குவரத்து அமைச்சர் இதைக் கவனித்து ஆவன செய்வார் எனப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர். (2-4)

### சட்டவிரோதமான முறையில்

## வெளிநாடுகளுக்கு ஆட்களை கடத்திய குற்றச்சாட்டின் பேரில் இந்தியர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இந்தியர் ஒருவர் கொட்டாஞ்சேனையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இந்தியருடன் மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வடக்கு -கிழக்கு இளைஞர்களை இந்தியா வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு குறித்த நபர் அனுப்பி வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதில் 44 கடவுச்சீட்டுக்கள் மற்றும் உயர் தொழில்நுட்பக்கருவிகள் போன்றனவும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தியா ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு விசா பெற்றுக்கொடுப்பதற்காக பத்துலட்ச ரூபா பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

மேலும் போலியான ஆவணங்களைத் தயாரித்து அதன் ஊடாக இலங்கை இளைஞர், யுவதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (2-4)

## ஊடகவியலாளர்களை பாதுகாக்க சகல நாட்டு அரசாங்கங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### பான் கீ மூன் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகின் சகல நாட்டு அரசாங்கங்களும் ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு பான் கீ மூன் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது,

ஊடகவியலாளர்களை பாதுகாப்பது மட்டுமன்றி அவர்களுக்கு எதிராக தாக்குதல்கள் மற்றும் அடக்கு முறைகளை கட்டவிழ்த்துவிடும் நபர்கள் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.கருத்துச் சுதந்திரம் மக்களின் மிக அடிப்படையான சுதந்திரங்களில் ஒன்று. சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் 19 ஆம் சரத்தில் ஊடக சுதந்திரம் பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ள போதிலும் , உலகின் சில நாடுகளில் இதற்கு உரிய மதிப்பு அளிக்கப்படுவதில்லை .

அத்துடன் அச்சு ஊடக நிறுவனங்கள் மீது கூடுதல் வரிச்சுமையை திணித்தல், வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களின் ஒலி, ஒளிபரப்புகளுக்கு தடை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் கண்டிக்கப்படவேண்டியவை.

இணைய தளங்களிலும் தற்போது செய்தி வெளியீட்டுக்கு பல்வேறு இடையூறு கள் ஏற்படுகின்றன. கடந்த வருடத்தில் 77 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும் என்றார்.

மேலும் கருத்துச் சுதந்திரம் குறித்த புதிய சட்டங்கள் வரவேற்கப்படுவதாகவும் அவை முழுமையாக அமுல்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் , ஊடகத்தின் சேவையை சிவில் சமூகம் , அரசாங்கம் மற்றும் ஏனைய தரப்பினர் புரிந்து கொண்டு அதற்கான அங்கீகாரத்தை வழங்க வேண்டு மென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (2-4)

### யாழ்ப்பாணத்தில் அறிவித்தது போன்று

## கிழக்கிலும் தனியார் காணிகளிலுள்ள படையினர் வெளியேற்றப்பட வேண்டும் - அரியநேந்திரன் எம்.பி.

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் பணிகளிலிருந்து இராணுவத்தினர் விரைவில் வெளியேறுவரென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் தனியார் காணிகளில் முகாம்கள் அமைத்து நிலை கொண்டிருக்கும் படையினரும் வெளியேற்றப்பட வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் விசேடமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் பலஇடங்களிலும் இராணுவத்தினர் தனியார் காணிகளில் முகாம்களை அமைத்துள்ளனர்.ஆனால், இப்போது யுத்தமில்லாத ஒரு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே,அவர்கள் தொடர்ந்தும் அங்கு நிலைகொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இதன் ஆரம்பக் கட்டமாக மட்டக்களப்பு உரிமையாளர்களிடம் தொடர்ந்தும் காணியைத் தமக்குத் தரவேண்டுமெனக் கோரி வருவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. இது ஓர்ஆரோக்கியமான செயலல்ல .

மட்டக்களப்பில் சுமுக நிலைதோன்றியுள்ளதாகவும் அரச தரப்பு தெரிவிக்கும் நிலையில் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தக் கூடியதான இராணுவப் பிரசன்னம் தொடர வேண்டிய தேவை இல்லை.

இந்த மாவட்டத்தில் இராணுவத்தின் அதிக நடமாட்டம் காரணமாக பொதுமக்கள் தொடர்ந்தும் அச்ச உணர்வுடனேயே வாழ்கின்றனர். இதன்காரணமாக அவர்களது சுதந்திரமான நடமாட்டமும் கட்டுப்படுத்தப்படுகிறது.

ஆகவே, இந்த விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலையிட்டு முதல் கட்டமாகத் தனியார் காணிகளிலுள்ள இராணு வத்தினரையாவது வெளியேற்ற வேண்டும் என அவர்கோரிக்கை விடுத்துள்ளார்.(2-4)

# கொழும்பு றோயல் கல்லூரி

## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை-2010

## வழிகாட்டல் பரீட்சை

## இரசாயனவியல்-I — Chemistry I

2மணித்தியாலங்கள் — 2Hours

31.பின்வரும் சேதனச் சேர்வைகளில் எது கருநாடிகளுடன் உயர் தாக்குத்திறன் உடையது?
1.$C_2H_5CooH$ 2.$CH_3CONH_2$ 3.$C_6H_5COCH_3$
4.$C_6H_5COCl$ 5.$CH_3CHO$

சேதனச் சேர்வை A யில் காணப்படும் தொழிற்பாட்டுக் கூட்டங்கள்

(1) $-C\equiv CH$ உம் $-\overset{O}{\overset{\|}{C}}-H$ உம்

(2) $-OH$ உம் $-O-\overset{O}{\overset{\|}{C}}-R$ உம்

(3) $-COOH$ உம் $-CH=CH_2$ உம்

(4) $-\overset{O}{\overset{\|}{C}}-OR$ உம் $-C\equiv CH$ உம்

(5) $-COOH$ உம் $-CH_2NH_2$ உம்

33. $CH_3COCH_2COOH \xrightarrow[(ii)\,y]{(i)\,x} CH_3CHOHCH_2COOH$


மேற்படி மாற்றீட்டில் x உம் y உம் ஆக இருக்கக்கூடியது?

| | x | y |
|---|---|---|
| (1) | $LiAlH_4$ | $H_2O$ |
| (2) | $H_2O$ | $LiAlH_4$ |
| (3) | $NaBH_4$ | $H_2O$ |
| (4) | $H_2O$ | $Ni / H_2$ |
| (5) | $Zn / Hg$ | $H_2O$ |


34. $CH_2=CH-\underset{CH_3}{\overset{H}{\overset{|}{\underset{|}{C}}}}-COO^-NH_4^+$ $\qquad$ $CH_2=CH-\underset{CONH_2}{\overset{CH_3}{\overset{|}{\underset{|}{CH}}}}$

மேற்படி சேர்வைகள் A யும் B யும் வேறுபடுத்தி அடையாளங் காண்பதற்கு பின்வரும் தாக்குபொருட்களில் எதனைப் பயன்படுத்தலாம்?
1.$NaNO_3$ உம் Conc HCl உம் 2.பீலிங்கின் கரைசல்
3.Anhyd, $Zncl_2$ Conc HClஉம் 4.NaOH உம் $K_2HgI_4$உம்
5. $Br_2$ ,நீர்

35.பின்வரும் சேர்வைகளில் மூலக்கூற்று இடை H- பிணைப்பு மூலக்கூற்றுH- ஆக பிணைப்பு வந்தர்வாலின் கவர்ச்சி விசை அடிப்படையில் உயர் கொதிநிலையைக் காட்டுவது?




36.பின்வரும் மாற்றீட்டுச் செயற்பாடுகளில் சரியானது?






37.பின்வரும் செயற்பாடுகளில் எது நடைபெறாது?

(2) $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-CH_2Br \xrightarrow[\text{dry ether}]{Mg} CH_3-\overset{O}{\overset{\|}{C}}-CH_2MgBr$

(3) $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-H \xrightarrow[(ii)\,H_2O]{(i)\,LiAlH_4} CH_3CH_2OH$

(4) $CH_3NO_2 \xrightarrow[(ii)\,dil\,NaOH]{(i)\,Fe/Conc\,HCl} CH_3NH_2$


(5) 


38.பின்வரும் அற்ககோல்களில் உயர் மூலவலிமை உடையது .
1.$CH_3CH_2OH$ 2.$CH_3OH$ 3.$(CH_3)_2CHOH$
4.$(CH_3)_3COH$ (5) 



39.பின்வருனவற்றில் எது பரிவுக்கட்டமைப்புகளை காட்டும் அதே நேரம் உறுதியற்றது?
(1) $CH=CH-Cl$ (2) $(CH_3)_2NH$ (3) $CH_2=CH-OH$
(4) $CH_2=CH-CH=CH_2$ (5) $CH_3OCH_3$

40.பின்வரும் சேதனச் சேர்வைகளில் எது கருநாடியாகச் செயற்பாடாது?
(1) $CH_3MgBr$ (2) $(CH_3)_2NH$ (3) $C_2H_5OH$
(4) $CH_3NH_2$ (5) $(CH_3)_3C-CH=CH_2$

41.பின்வரும் சேர்வைகளில் எது நடுநிலை $FeCl_3$ இன் நிறத்தை செவ்வூதா நிறமாக மாற்றும்?
1.Cinamic acid 2,Citral 3.Eugenol
4.Salicilicacid 5.Cinnamaldehyde


42.பின்வரும் சேர்வைகளில் எது உயர் அமில வலிமை உடையது?
(1) $CH_3OH$ (2) 

(3) $CH_3COOH$ (4) $CH_3CHO$ (5) $H_2C_2O_4$

43. பின்வரும் சேர்வைகளில் எது $P_2O_5$ உடன் நீர்ப்பகுப்பிற்கு உள்ளாகும்?
(1) $CH_3CONH_2$ (2) $(CH_3)_2-CHOH$ (3) 

(4) $CH_3-\overset{OH}{\overset{|}{CH}}-CH_2CHO$ (5) $Cl-CH_2-CH_2NH_3^+Cl^-$

44.பின்வரும் பொறிமுறைகளில் சரியானது?




45.சேதனச் சேர்வை A ஆனது $Sp^3,SP,SP^2$ ஆகிய கலப்புக்களை காட்டும். இது Na உடன் தாக்கத்தில் $H_2(g)$ ஐக் கொடுக்காததுடன் தளமுனைவார்க்கப்பட்ட ஒளியின் தளத்தைத் திருப்பவல்லது. இது சிஸ்-திரான்ஸ் சமபகுதியத்தைக் கொண்டிருப்பதுடன் NaOH ஐயுடன் வெப்பப்படுத்தும் போது $NH_3(g)$ ஐ விடுவிக்கும் .

(1) $CH_3-\underset{H}{\overset{CONH_2}{\overset{|}{\underset{|}{C}}}}-C\equiv C-CH_3$ $\qquad$ (2) $CH_3-\underset{H}{\overset{COO^-NH_4^+}{\overset{|}{\underset{|}{C}}}}-C\equiv C-H$

(3) $CH_3-\underset{H}{\overset{H}{\overset{|}{\underset{|}{C}}}}-C\equiv C-CONH_2$ $\qquad$ (4) $CH_3-\overset{CONH_2}{\overset{|}{C}}-C\equiv C-H$

(5) $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-C\equiv C-NH_2$

வினா 46 இல் இருந்து 50 இற்கான அறிவுறுத்தல்கள்

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (a)யும்(b)யும் மாத்திரம் திருத்தமானவை | (b)யும்(c)யும் மாத்திரம் திருத்தமானவை | (c)யும்(d)யும் மாத்திரம் திருத்தமானவை | (d)யும்(a)யும் மாத்திரம் திருத்தமானவை | வேறு தெரிவு களில் எண்ணோ சேர் மானங் களோ திருத்தமானவை |

46. பின்வரும் தரவுகளில் எது /எவை சரியானது/சரியானவை?
a. எந்தவொரு தொகுதியிலும் மீளும் தாக்கம் சமநிலைஅடைய முடியும்
b. சமநிலையில் தாக்கிகளினதும் விளைவுகளினதும் செறிவுகளும் பகுதியமுக்கங்களும் மாறிலியாகும்
c. முற்தாக்கத்தினதும் பிற்தாக்கத்தினதும் ஏவற்சக்திகள் சமமானவை
d. ஊக்கியால் தாக்கத்தின் ஏவற்சக்தியைப் போன்று வெப்பவுள்ளுறையையும் மாற்ற முடியும்.

47.பின்வரும் கூற்றுக்களில் எது/எவை சரியானது/சரியானவை?

a. Clஇன் ஒட்சி அமிலங்கள் எல்லாம் வன்னமிலங்களாகும்.

b.கற்றயன் கரைசல் ஒன்றில் காணப்படும் $Zn^{2+}$ ஐயும் $Cu^{2+}$ ஐயும் $(NH_4)^2S(aq)$ஐக் கொண்டு அடையாளம் காணலாம்.

c.எல்லாக் கார உலோகங்களும் நீருடன் தாக்கம் புரிந்து $H_2(g)$ ஐ விடுவிக்கும்

d.காரமண் உலோக நைத்திரைட்டுக்கள் நீருடன் தாக்கம் புரிந்து $NH_3(g)$ ஐ விடுக்கும்

48.பின்வருவனவற்றில் எது/எவை புறவெப்பத் தாக்கம்/ தாக்கங்கள்?

(a) $I_2(s) \longrightarrow I_2(g)$ (b) $NaOH(s) \longrightarrow NaOH(aq)$

(b) $Na^+(g) + Cl^-(g) \longrightarrow NaCl(s)$ (d) $Br_2(l) \longrightarrow Br_2(g)$

49.பின்வருவனவற்றில் எது/எவை திண்மமாக /திண்மங்களாகக் காணப்படும்?



(a) $MgCO_3$ (b) $(NH_4)_2C_2O_4$ (c) $KIO_3$ (d) Zn - Hg




50.பின்வரும் சேர்வைகளில் எது/எவை நீரில் கரைந்து இரண்டு அமிலங்களை கொடுக்கும்?


(a) $SO_2 + Br_2 + H_2O$ (b) $PCl_5 + H_2O$ (c) $P_2O_5 + H_2O$ (d) $Cl_2 + H_2O$

51 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்களுக்கான அறிவுறுத்தல்களுக்கான சுருக்கம்

| தெரிவுகள் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| ① | உண்மை | உண்மையாகவிருந்து முதலாம் கூற்று திருத்தமான விளக்கத்தை தருவது |
| ② | உண்மை | உண்மையாகவிருந்து முதலாங்கூற்றுக்கு திருத்தமான விளக்கத்தை தராதது |
| ③ | உண்மை | பொய் |
| ④ | பொய் | உண்மை |
| ⑤ | பொய் | பொய் |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 51 | குறித்த வெப்பநிலையில் சமநிலைத் தொகுதியில் சமநிலை மாறிலியின் கோவையில் ஒருபோதும் கரைப்பானின் செறிவு உள்ளடக்கப்படாது. | சமநிலத் தொகுதியொன்றில் ஏனைய கூறுகளின் செறிவுடன் ஒப்பிடுகையில் கரைப்பானின் செறிவு மிகவும் உயர்வாகக் காணப்படுவதால், இது மாறிலி எனக் கருதப்படும். |
| 52. |  இற்கும் $H_2O$ இற்கும் இடையில் $CH_3COOH$ இன் பங்கீட்டிற்கு நேனசுவின் பங்கீட்டு விதியை பிரயோகிக்க முடியும் |  இல் $CH_3COOH$இரு பகுதியமாகக் காணப்படும். |
| 53. | தாக்கவீதத்தை துணியும் தாக்கமொன்றில் தாக்கக் கலவையின் வெப்பநிலையை மாறிலியாகப் பேணல் வேண்டும். | தாக்கமொன்றின் தாக்கவீதம் வெப்பநிலையில்த் தங்கியுள்ளது. |
| 54. | வெப்பநிலை தொகுதியொன்றின் வெப்பமாறிலியின் அளவின் அளவீடாகும். | புறவெப்பத் தாக்கமொன்றில் இருந்து பெறப்படும் வெப்பம் அகற்றப்படாமை வெடித்தலுக்குக் காரணமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 55. | எந்தவொரு கனவளவு விகிதத்திலும்  உடன் $NaNO_2$ ஐயும் dil HCl ஐயும் 0°C – 10°C வெப்பநிலையில் தாக்கம் புரிவதால்  உருவாகும். | 10°C இற்கு மேலே  காணப்பட முடியாது. |
| 56. | $Fe^{3+}$, $Mn^{2+}$ ஆகிய நீர்க்கரைசல்களை $NH_4OH$ ஐயும் $NH_4Cl$ ஐயும் கொண்டு வேறு பிரித்து இனங்காண முடியும். | $NH_4Cl$ ஆனது $NH_3(aq)$ இல் $OH^-$ அயன் செறிவைக் குறைக்கும். |
| 57. | $CH_3NH_2$ யும் $(CH_3)_2NH$ ஐயும் வேறு பிரிப்பதற்கு $HNO_2$ அமிலத்தை ஆய்வுகூட தாக்குபொருளாகப் பயன்படுத்த முடியும். | $NaNO_2$ உம் HCl உம் $(CH_3)_2NH$ உடன் மஞ்சள் எண்ணெயைக் உருவாக்கும். ஆனால் $CH_3NH_2$ உருவாக்காது. |
| 58. | NaOH / CaO இன் மேலாக $CH_3COOH$ அமில ஆவியைச் செலுத்துவதன் மூலம் ஆய்வுகூடத்தில் $CH_4$ இனைக் தயாரிக்கலாம். | $CH_3COOH$ இனை அற்ககோலாக மாற்றும் போது தாழ்த்தல் நடைபெறும். |
| 59. | $KMnO_4$ இன் ஊதா $Na_2S_2O_3(aq)$ இனால் நிறமற்றதாக மாற்றப்படும். | $KMnO_4$ உடன் $Na_2S_2O_3(aq)$ தாழ்த்தலேற்றத் தாக்கத்தில் ஈடுபடும். |
| 60. | $N_2(g)$ இனை அமுக்குவதன் மூலம் $N_2(l)$ இனைப் பெறமுடியும். | உயர் அமுக்கத்தில் $N_2(g)$ மும்மைப் பிணைப்பு உடைவதுடன் $N_2(l)$ உருவாகும். |



# இரசாயனவியல்-II Chemistry II

*3மணித்தியாலங்கள்* *3Hours*

பகுதி A –அமைப்புக்கட்டுரை

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

அகிலவாயு மாறிலி $R=8.314Jk^{-1}mol^{-1}$

அவகாதரோ மாறிலி $N_4=6.022x10^{23}mol^{-1}$

1.a.IAகூட்டத்தினாலும் IIA கூட்டத்தினதும் மூலகங்கள் சிலவற்றின் இரண்டாம் அயனாக் கற்சக்திப் பெறுமானங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| மூலகம் | இரண்டாவது அயனாக்கற்சக்தி / $Jkmol^{-1}$ |
|---|---|
| Lithium | 7300 |
| Sodium | 4566 |
| Beryilium | 1760 |
| Magnesium | 1450 |

i. Naஇன் இரண்டாம் அயனாக்கற் சக்திக்கான சமன்பாட்டை எழுதுக.

.......................................................................................

ii.இலித்தியத்தின் இரண்டாம் அயனாக்கற்சக்தி சோடியத்தை விடவும் உயர்வாக இருப் பதற்கான காரணத்தைத் தருக.

.......................................................................................

.......................................................................................

iii.கூட்டம் IIAஇன் இரண்டாம் அயனாக்கற் சக்தியை விடவும் கூட்டம் IAஇன் இரண்டாம் அயனாக்கற்சக்தி உயர்வாக இருப்பது ஏன் என விளக்குக

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

b. கீழே தரப்புட்ட பொருத்தமான பெட்டிகள் $NO_2^+$இனதும் $MgCO_3$இனதும் லூவியின் குற்றுத்தர கட்டமைப்பைத் தருக.

| $NO_2^+$ | $MgCO_3$ |
|---|---|
| | |

c.$NH_4$ OH (hydroxylamine) தாழ்த்தும் கருவியாகச் செயற்பட்டு $Fe^{3+}$ இணை $Fe^{2+}$ ஆக தாழ்த்தும் .இதன் போது$NH_4$ OH ஒட்சியேற்றப்பட்டு நைதரசனின் ஒட்சைட்டு ஒன்றைக் கொடுக்கும். 0.200 $moldm^{-3}$ $NH_2$ OH (aq) இன் 25.00$cm^3$ தாக்கம் புரிவதற்கு 0.400 $moldm^{-3}$ $Fe^{3+}$ (aq) தேவைப்பட்டது.

i. $NH_2$ OH (aq) இற்கும் $Fe^{3+}$ இற்கும் இடையேயான தாக்கத்தின் பீசமானம் யாது?

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

ii. இத்தாக்கத்தில் N இன் ஒட்சியேற்ற எண்........................இருந்து ..............இற்கு மாறுகின்றது.

iii. விளைவு நைதரசன் ஒட்சைட்டின் சூத்திரம் யாது?

.......................................................................................

iv. $NH_2$ OH (aq) இற்கு $Fe^{3+}(aq)$ இற்கும் இடையே நடைபெறும் தாக்கத்தின் சமன் படுத்திய சமன்பாட்டை எழுதுக.

.......................................................................................

d.பின்வரும் பதார்த்தங்களுக்கு ஒவ்வொரு சோடிப் பரிவுக்கட்டமைப்புகளை கீழே தரப்பட்ட பெட்டிகளில் வரைக.

.......................................................................................

(i) $C_2H_5^-$

$\longleftrightarrow$

(ii) $O_3$


$\longleftrightarrow$

# களம் பல கண்ட யாழ் கோட்டை

22

முற்றவெளியெங்கும் வீதிகள் எங்கும் விடுதலைப்புலிகளால் விதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளும் மிதிவெடிகளும் இராணுவத்தை வெளியேற விடவில்லை.

அதனால் இராணுவத்தினர் தொடர்ந்து கோட்டைக்குள்ளிருந்து ஷெல் தாக்குதல்களையும் வெகுதூரம் பாய்கின்ற ஆட்லறி ஷெல் தாக்குதல்களையும் ஓயாது யாழ்ப்பாண நகரத்திற்கும் சுற்றுப்புறத்திற்கும் ஏவினர். 1987 ஆம் ஆண்டு முடிவு வரை




ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்து நடந்தன. 1987 ஆரம்பத்தில் ஷெல் தாக்கு தல்களோடு பொம்பர் குண்டு வீச்சு விமானங்களும் யாழ்ப்பாணப்பகுதியில் பெரும் தாக்குதல்களை மேற்கொண்டன.

21 மே 1986 இல் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று கன்னாதிட்டியில் விழுந்து வெடித்ததில் 9 பேர் பலியாகினர். கடைகள் சில சேதமடைந்தன. 11 ஜுன் 1986 இல் மண்டைதீவுக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 31 குருநகர் மீனவர்கள் இராணுவத்தினரால் குருரமாக வெட்டியும் குத்தியும் சுட்டும் கொல்லப்பட்டனர். 30 ஜுலை 1986 இல் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் அத்தியடி, ஆரியகுளம் ,கொட்டடி, ஆனைப்பந்தி, நாவலர் வீதி முதலான பகுதிகளில் விழுந்து வெடித்ததில் 3 பேர் பலியாகினர். 14 பேர் கடுங் காயங்களுக்குள்ளாகினர்.

24 ஓகஸ்ட் 1986 இல் நிகழ்ந்த கோட்டைக் ஷெல் தாக்குதல்கள் மிக மோசமானவை. ஆஸ்பத்திரி வீதியில் காலை மக்கள் நடமாட்டம் அதிகமாகவிருந்த வேளையில் விழுந்த ஷெல்கள் ஹற்றன் நசனல் வங்கி முகாமையாளர் எஸ்.சூரியகுமாரைப் பலியெடுத்தது. அவருடன் நான்குபேர் மரணமாகினர். புத்தகக்கடையில் பத்திரிகை விற்றுக் கொண்டிருந்த றெஜி பீரிஸ் என்ற 18 வயதுப் பெண் மரணத்தைத் தழுவ நேர்ந்தது. முத்துக்குமார் என்ற வயோதிபர் கணத்தில் பலியானார். ஏராளமான மக்கள் அன்று காயம் அடைந்தனர்.


யாழ் கோட்டையிலிருந்து 23 ஓகஸ்ட் 1986 இல் ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் ஒன்று வெகுதூரம் பயணம் செய்து ஐயனார் கோயிலடியில் திருமண வீடொன்றின் மேல் விழுந்தது. திருமணம் தெல்லிப்பலைத் துர்க்கையம்மன் கோவிலில் நிகழ்ந்தது. துர்க்கையம்மன் ஆலயத்தில் தாலிகட்டி முடிந்து மணமகன் வீட்டிற்கு வருகை தந்திருந்த மணமக்கள் இருந்த வீட்டின் கூரை மீது விழுந்த ஷெல் கீழே இறங்கியது. மணமகன் உதய சூரியன் மணவறை உடைகளோடு இரத்த வெள்ளத்தில் பலியானார். அவர் அருகில் நின்றிருந்த இராசதுரை என்ற வயோதிபரும் பலியாக நேர்ந்தது. பலர் காயமடைந்தனர். புதிய வாழ்வின் ஆரம்பத்திலேயே கருகிப்போன மணமகள் சகுந்தலாதேவியின் கண்ணீர் யாழ்ப்பாணத்தைச் சோகத்திலாழ்த்தியது.



விமானக்குண்டுவீச்சினால் நிர்மூலமாக்கப்பட்ட கட்டடங்கள்

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து துப்பாக்கிச்சூடுகளும் இடைக்கிடையே நிகழும் கண்மூடித்தனமாக துப்பாக்கிகள் முழங்கும் விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலுக்குப் பலியாகிக் கோட்டைக்குள் இராணுவத்தினரும் சரிந்தனர்.

கொட்டடிப்பகுதியில் ஷெல் தாக்கியதால் மாணவன் ஒருவனும் ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்த பாக்கியம் என்ற பெண்ணும் அவ்விடத்தில் பலியாகினர். 12 பேர் வரையில் கடும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் பின்னர் மரணமடைந்தனர். அன்று காலையிலிருந்து மாலை வரை கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் நடந்தன.



10 ஓகஸ்ட் 1986 இல் யாழ்கோட்டைக்கு முன் காங்கேசன்துறை வீதியில் 15 அடி உயரமான அரண் ஒன்றினை புளொட் இயக்கத்தினர் அமைத்துக்கொண்டிருந்தனர். அவர்களை நோக்கிச் சரமாரியாகச் துப்பாக்கிச் சூடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் ஒன்று யாழ்ப்பாணம் வாழைப்பழக்கடைப் பகுதியில் விழுந்து சிதறியதால் செ.ராமமூர்த்தி, ச.பாலச்சந்திரன், ச.ஞானலிங்கம் ஆகிய மூவரும் அவ்விடத்தில் கொல்லப்பட்டனர்.11 பேர் வரையில் கடும் காயங்களுக்குள்ளாகினர்.

7செப்டம்பர் 1986 அதிகாலையே யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமாகின. கஸ்தூரியார் வீதியில் விழுந்த ஷெல்லிற்குப்பலர் பலியாகினர். வீடுகள் சேதமடைந்தன. மத்திய கல்லூரிக் கட்டிடங்களும் வேம்படி மகளிர் கல்லூரிக் கட்டிடங்களும் சேதமுற்றன. போராளிகளின் றொக்கட் தாக்குதல்களால் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பலதடவைகள் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் தாக்கப்பட்டிருக் கின்றது. 8 செப்டம்பர் 1986 இல் பெரும் சத்தது டன் குழந்தைகள் வார்ட்டின்மேல் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. குழந்தைகளை வைத்திருந்த தாய்மார்கள் தம் குழந்தை

**செங்கை ஆழியான்**

களை அணைத்துக்கொண்டு கீழே விரைந்து இறங்கிவிட்டதால் உயிர்ச்சேதம் தடுக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கோட்டையில் ஷெல் குத்தப்படுகிறது என்ற சத்தம் எழுந்ததும் உடனடியாக அபாய மணி - சைரன் ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஒலி கேட்டதும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச்செல்ல முடிந்தது. 29 ஒக்டோபர் 1986 இல் ஆஸ்பத்திரி முன்றலில் ஷெல் ஒன்று விழுந்தது. அதனால் நால்வர் உடனடியாகப் பலியாகினர். 3 பொலிஸ்காரர் உட்பட 32 பேர் காயங்களுக்குள்ளாகினர். மிகமோசமான ஷெல் தாக்குதல்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மீது கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்டது 30 மார்ச் 1987 அன்றாகும். 19, 20 ஆம் வார்ட்டுக்களில் காயம் பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக்கொண் டிருந்தார்கள். அவர்கள் கட்டில்களில் காயங்களுடன் படுத்திருந்த வேளையில் கோட்டையிலிருந்து ஷெல் ஏவப்பட்டது. (தொரும்)

## போலி நாணயத்தாள்களின் புழக்கம் மன்னாரில் அதிகரித்து காணப்படுகிறது

### எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் பரவலாக பல பிரதேசங்களிலும் போலி பண நோட்டுக்கள் (கள்ளநோட்டுக்கள்) பாவனைக்குட் படுத்தப்பட்டு வருவதால் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுமாறு வங்கிகள் அறிவுறுத்தியுள்ளன.

கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது மன்னாரில் மக்களின் நடமாட்டம் பல மடங்காக அதிகரித்திருக்கும் நிலையில் ஆயிரம் ரூபா மற்றும் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் இருந்து வருகின்றது. அண்மைக் காலங்களாக இவ்வாறான போலி பண நோட்டுக்களின் புழக்கம் இருந்து வருவதாக தெரிவிக்கப் பட்டபோதும் அவற்றை உறுதிப்படுத்து வதில் சிக்கல்கள் நிலவி வந்தன.

இந் நிலையில் கொடுக்கல் வாங்கல்களுக்காக பொதுமக்களும் வர்த்தகர்களும் மன்னாரில் உள்ள வங்கிகளுக்குச் சென்று வரும் போதே போலி நோட்டுக்கள் தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை பொதுமக்களால் அறிந்ததுகொள்ள முடிகின்றது.

மன்னாரில் உள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளில் பணத்தினை வைப்பிட்டுச் செல்லும் மக்கள் தாம் கொண்டு செல்லும் பணநோட்டுக்களின் உண்மைத் தன்மை, நம்பகத்தன்மை தொடர்பாக தெரிந்து கொள்ளுமாறும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும்போது மிக அவதானத்துடன் செயற்படுமாறும் அங்கு இயங்கிவரும் வங்கிகள் கேட்டுக்கொள்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் போலி பண நோட்டுக்கள் புழக்கத்தில் இருந்து வருவது தொடர்பாக ஹற்றன் நஷனல் வங்கியின் மன்னார் கிளை முகாமையாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பாக ஜனாதிபதியின் உருவத்தைத் தாங்கியதாக அண்மையில் புதிதாக வெளியிடப் பட்டிருக்கின்ற ஆயிரம் ரூபாய் பெறுமதியான பண நோட்டு மற்றும் இரண்டாயிரம் ரூபாய் பெறுமதியான பண நோட்டுக்களை ஒத்ததாகவும் அவற்றின் தொடர் இலக்கங்கள் ஒரே மாதிரி இருப்பதாகவும் இவையே வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே வர்த்தக மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் பொதுமக்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் வங்கியின் முகாமையாளர் பொது மக்களை கேட்டிருக்கின்றார். (2-4)

## அவசரகாலச் சட்டம், பொன்சேகா விவகாரம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கவலை

(கொழும்பு)

இலங்கையில் அவசரகாலச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பது மற்றும் ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவ காவலில் வைத்துள்ளமை ஆகியன குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலை தெரிவித்துள்ளது.

ஆனாலும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவது ஒன்றியத்தின் நோக்கமல்ல என்று ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுத் தலைவர் பேர்னாட் செவேஜ் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவது இலங்கையை பொறுத்தவிடயம்.

ஆனால் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை நிறுத்திவிடுவதென ஐரோப்பிய ஒன்றியம் உறுதியான தீர்மானத்தை எடுத்துள்ளது.

மனித உரிமைகள், தொழில் உரிமைகள், ஊடக சுதந்திரம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் இலங்கை ஒழுங்காக நடந்து கொள்ளுமானால் அதன் பின்னர் ஒன்றியம் அதன் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யக்கூடும். அதன் மூலம் இலங்கை அந்த சலுகையை மீண்டும் பெறலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் போக்கு சுயாதீனமானது. ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான உயர் பிரதிநிதி அஷ்ரன் ஏப்ரல் மாத பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து வெளியிட்ட அறிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிருவாகம் பற்றிய அபிப்பிராயத்தை தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

அஷ்ரன் தனது அறிக்கையில் தேர்தல் வெற்றி குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷவை பாராட்டியதுடன் புதிய அரசாங்கத்துடன் ஜனாதிபதி ஒத்துழைப்பதோடு நல்லிணக்கம் உட்பட இலங்கையின் நீண்டகால தேவையான அரசியல் தீர்வையும் கவனத்தில் எடுப்பாரென நம்பிக்கை தெரிவித்தார்.

அரசியலமைப்பை மீறாமலும் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியதாகவும் இருக்கும் பட்சத்தில் அரசியலமைப்பில் திருத்தங்களை கொண்டு வருவதில் பிரச்சினை எதுவும் கிடையாது என்றார். (2-4)

## ஆயுதங்கள் கண்டெடுப்பு

குச்சவெளி பெரிய குளம் வீதியிலுள்ள காட்டுப் பகுதியிலிருந்து குண்டுகளும் ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. திருகோணமலைப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதலில் இவை கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களில் கிளைமோர் குண்டு, வெடி பொருட்கள், தொலைத் தொடர்பாடல் உபகரணம் என்பனவும் அடங்குகின்றன. (4-3)

### குண்டுப்புரளியினால்

# தாய்வான் விமானம் தரையிறக்கப்பட்டது

விமானத்தில் வெடி குண்டு இருப்பதாக வெளியான புரளியை அடுத்து தாய்வான் விமானமொன்று அவசரமாக தரையிறக்கப் பட்டது. தாய்வானிலிருந்து சீனா நோக்கிச் சென்ற விமானம் ஒன்றே இவ்வாறு அவசர மாக தரையிறக்கப்பட்டுள்ளது. விமானத்தில் பயணம் செய்த நபர் ஒருவர் இந்த குண்டு புரளியை ஏற்படுத்தியுள்ளார்.

தமது பயணப் பொதிகளில் குண்டு இருப் பதாக விமானத்தில் பயணம் செய்த நபர் ஒருவர் கூறியதனைத்தொடர்ந்து உடனடி யாக அருகில் உள்ள விமான நிலையத்தில் விமானம் தரையிறக்கப்பட்டுள்ளது.

எனினும் நகைச் சுவையாக தாம் இந்தப் புரளியை கிளப்பியதாகவும் உண்மையில் குண்டு எதனையும் தாம் கொண்டு செல்ல வில்லை எனவும் விசாரணைகளின் போது குறித்த பயணி தெரிவித்துள்ளார்.

கிழக்கு சீன பகுதியில் குறித்த விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. லின் என்ற அமெரிக்கக் கடவுச் சீட்டை உடைய நபர் ஒருவரே இவ்வாறு குண்டு புரளியை கிளப்பியுள்ளார். குறித்த நபர் அதிக மது போதையில் இருந்தமைக்கான சான்றுகள் எதுவுமில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீவிர சோதனைகள் மற்றும் விசாரணைகளின் பின்னர் குறித்த விமானம் சீனாவின் சாங்காய் நகருக்கு தனது பயணத்தை தொடர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# ரஸ்யா,சோமாலியாவில் குண்டுவெடிப்பு 26 பேர் பலி; 21 பேர் படுகாயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கபார்டினோ பல்கேரியா குடியரசில் நேற்று முன்தினம் மே தினக் கொண்டாட்டத்தின் போது நடந்த குண்டு வெடிப்பில் ஒருவர் பலியானார். 21 பேர் படுகாயம் அடைந்தனர். ஆபிரிக்க நாடான சோமாலியாவில் நடந்த இரட்டை குண்டு வெடிப்பில் 25 பேர் பலியாயினர்.

ரஷ்யாவின் கபார்டினோ பல்கேரியா குடியரசின் தலைநகரான நல்சிக் விளையாட்டுகளின் சொர்க்க பூமியாகக் கருதப்படுகிறது. இது குறித்து அந்நாட்டு உள்துறை செய்தித் தொடர்பாளர் மரினா க்யாசோவா கூறுகையில், குண்டு குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது. அதன் உட்பகுதியில் நிறைய பேரைக் காயப்படுத்தும் வகையில் நிறைய இரும்புத் துண்டுகள் வைக்கப்பட்டுள்ளன. 21 பேர் காயம் அடைந்துள்ளனர்.

ஆனால் சரியான எண்ணிக்கை எவ்வளவு என்பது இனிமேல் தான் தெரியும் என்று தெரிவித்தார். சோமாலியா தலைநகர் மொகா




டிஷுவில் உள்ள ஒரு மசூதியில் அடுத்தடுத்து நடந்த இரட்டை குண்டு வெடிப்பில் 25 பேர் பலியாயினர். பல பேர் படுகாயம் அடைந்தனர். இங்கு நேற்று முன்தினம் மே தினக் கொண்டாட்டமாக குதிரைப் பந்தயம் நடந்து கொண்டிருந்த போது குண்டுவெடித்தது. இதில் ஒருவர் பலியானார். (2-4)

# அவுஸ்திரேலியாவில் மீண்டும் இந்திய மாணவர் மீது தாக்குதல்

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் தனியாக நடந்து சென்ற இந்திய மாணவர் மீது அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று வெறித்தனமாகத் தாக்குதல் நடத்திய சம்பவம் வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் கடந்த ஆண்டு ஜுன் முதல் இதுவரை இந்தியர்கள் மீது 100 முறை தாக்குதல்கள் நடந்துள்ளன. அதன் தொடர்ச்சியாக மற்றொரு சம்பவம் நடந்துள்ளது.

சிட்னி நகரின் மேற்குப் பகுதியில் உள்ள வெஸ்ட்மீட் என்ற இடத்தில் அமோஸ் தெருவில் தனியாக ஒரு இந்திய மாணவர் நடந்து சென்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று அவரைத் தாக்கியுள்ளது. அவர் கீழே விழுந்த பின்னும் உதைத்து அடித்துள்ளது. அந்த வழியாகச் சென்ற கார் ஒன்று இச்சம்பவத்தைப் பார்த்து நின்றவுடன் அவர்கள் அடிப்பதை நிறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் ஏப்ரல் 28 ஆம் திகதி நடந்துள்ளதாக சிட்னி மார்னிங் ஹெறால்டு பத்திரிகை தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை அது வெளியிடவில்லை.

இந்நிலையில், இச்சம்பவம் குறித்து ஆஸி பொலிசார் கூறுகையில் இது இனவெறி அடிப் படையில் நடக்கவில்லை. அப் பகுதியில் நிறைய திருட்டு, கொள்ளை சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

மேலும் இந்தியர்களை வெகுசுலபமாகத் தாக்கிவிடலாம் என்ற எண்ணத்தில் இது போன்ற சம்பவங்கள் கடந்த காலத்திலும் நடந்துள்ளன. திருட்டு சம்பவங்களில் அப் பகுதியில் 13 பேரை கைது செய்துள்ளோம். இது குறித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளனர். (2-4)



*ஜொலிக்கும் கண்காட்சி : சீனாவின் ஷாங்காய் நகரில் உலக வர்த்தக கண்காட்சி 2010 கோலாகலமாக தொடங்கியது. அதன் தொடக்க விழாவையொட்டி சாங்காய் நகரமே ஒளிவெள்ளத்தில் மிதந்தது. வானில் வாணவேடிக்கை வர்ணஜாலம் காட்டுகிறது.*

# மொபைல் போன்களால் ஏற்படும் பாதிப்பு குறித்து நீண்ட கால ஆய்வு ஆரம்பம்

(லண்டன்)



மொபைல் போன்களை பயன்படுத்துவதால் ஏற்படும் உடல் நல பாதிப்புகளை உறுதியாக அறிந்து கொள்வதற்காக பிரிட்டன் டென்மார்க் உள்ளிட்ட ஐந்து ஐரோப்பிய நாடுகளில் நீண்டகால ஆய்வுமேற் கொள்ளப் படுகிறது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுகாதார ஆராய்ச்சி திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்தி வரும் பேராசிரியர் லாவ்ரி சாலிஸ் கூறியதாவது, மொபைல் போன்களை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதால் இதய நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்படும் என ஒரு சிலர் கூறி வருகின்றனர். இருந்தாலும் இது தொடர்பான உறுதியான ஆய்வு முடிவுகள் எதுவும் வெளியாகவில்லை.

இதுகுறித்து இதுவரை வெளியான ஆய்வு முடிவுகள் அனைத்தும் மிக குறுகிய காலங்களில் மேற்கொள்ளப்பட்டவை. இது தொடர்பாக குறைந்தது 20 ஆண்டுகள் தொடர்ந்து ஆய்வு நடத்தினால்தான் மொபைல் போன் பயன்படுத்துவதால் என்ன பாதிப்பு ஏற்படும் என்பதை தெளிவாக அறிய முடியும். இதற்காக பிரிட்டன், டென்மார்க், பின்லாந்து, சுவீடன், நெதர்லாந்து ஆகிய ஐந்து நாடுகளில் நீண்ட கால ஆய்வு நடத்தவுள்ளோம்.

இந்த நாடுகளில் மொபைல் போன்களை பயன்படுத்தும் 20 இலட்சம் பேர் இந்த ஆய்வில் பங்கேற்கவுள்ளனர். 18இலிருந்து 69 வயதுக்குட்பட்டவர்கள். மட்டுமே இந்த ஆய்வில் பங்கேற்பர் மொபைல் போன் பயன்பாடு குறித்தும் இதனால் அவர்களுக்கு எந்த வகையான மாற்றம் அல்லது பாதிப்பு ஏற்படுகிறது என்பது குறித்து ஒன் லைன்வாயிலாக கேள்விகள் கேட்கப்படும். இதற்கு அவ்வப்போது அவர்கள் பதில் அளிப்பர். அவர்களுக்கு ஏற்படும் தலைவலி, தூக்கமின்மை போன்ற பிரச்சினைகள் குறித்தும் இதில் கேட்கப்படும். 20 ஆண்டுகளுக்கு பின் இந்த ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டும் இதன் முடிவில் மொபைல் போன்களை பயன்படுத்துவதால் எந்தவகையான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதை உறுதியாக அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு லாவ்ரி சாலிஸ் கூறினார். (2-4)



ரஷ்யாவில் உள்ள மணல் சிற்பம்....

# பத்து மணி நேரம் தூங்கினால் நூறு ஆண்டுகள் வாழலாம்!

### புதிய ஆய்வு முடிபு

(லண்டன்)

நீண்ட காலம் வாழ்ந்து சென்சுரி அடிக்க ஆசையா...? அப்ப தினமும் குறைந்தது 10 மணி நேரம் தூங்க வேண்டும் என்கிறது புதிய ஆய்வு முடிபு. தூக்கம் குறித்து சீனாவில் வெளியான ஒரு புள்ளிவிபர அடிப்படையில் புதிய ஆய்வு நடத்தப்பட்டது. அதன் முடிபுகளை தி டெய்லி மெயில் வெளியிட்டுள்ளது. சீன ஆய்வில் 65 வயதுக்கு மேற்பட்ட 15 ஆயிரத்து 638 பேரிடம் தூங்கும் நேரம் குறித்து கேட்கப்பட்டிருந்தது. அவர்களில் 3 ஆயிரத்து 927 பேர் 90 முதல் 99 வயதினர். 2 ஆயிரத்து 794 பேர் 100 வயதினைக் கடந்தவர்கள்.

ஆய்வு பற்றி ஓரேகானில் உள்ள போர்ட் லாண்ட்ஸ்டேட் பல்கலைக்கழக பேராசிரியர் டனான் குவ் கூறுகையில், ஆய்வில் பங் கேற்றவர்களில் 65 சத வீதம் பேர் தினமும் நன்றாக தூங்கியதாக தெரிவித்திருந்தனர். மதிய வேளை குட்டித்தூக்கம் உட்பட தின மும் ஏழரை மணி நேரம் தூக்கத்துக்கு ஒதுக்கியிருந்தனர். 100 வயதைத் தாண்டியவர்கள் 70 சதவீதத்தினர் 10 மணி நேரத்துக்கு மேல் தூங்கியதாக கூறியிருந்தனர் என்றார்.

100 வயதுக்கு மேற்பட்டவர்களில் சிலர் மட்டுமே தினமும் 5 மணி நேரத்துக்கும் குறைவான காங்கியகாக கூறினார். பெண்களை விட 23 சதவீதம் அதிக ஆண்கள் நல்ல தூக்கம் இருந்ததாக தெரிவித்தனர். அதன் அடிப்படையில் அதிக நேர தூக்கத்தால் வாழ் நாள் நீடிப்பது தெரிய வந்தது என்றும் டானான் கூறினார்.



உடலுக்கும் மூளைக்கும் புத்துணர்வு அளிப்பதுடன் நோய் எதிர்ப்பு சக்தியை விழிப்புடன் செயல்படத் தூண்டும் முக்கிய காரணியாக தூக்கம் உள்ளது. தூங்கும் போது செல்கள் உற்பத்தி ஆகின்றன. உடலின் நச்சுத்தன்மையை நீக்கி நோய் எதிர்ப்பைத் தூண்டுகின்றன என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது. (2- 4)



# அழகுக்கலை பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் அதிகம்...

அழகுபடுத்தும் கலைத்துறையில் அதிக இலாபம் சம்பாதிக்கலாம் என்பதை அதிகரித்துக் கொண்டிருக்கும் அழகுக்கலை நிலையங்களை வைத்து நாம் உணர்ந்துகொள்ளலாம். உடலைச் சுத்தமாக வைத்திருப்பதோடு அழகு படுத்திப் பார்க்கவேண்டும் என்ற ஆசை அனைவர் மத்தியிலும் இயல்பாக அமைந்துள்ளது.

நடன, நாட்டியம் மற்றும் சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்கான ஒப்பனைக் கலைஞர்கள் பணியமர்த்தப் பட்டிருப்பதைப் போன்று தற்போது அனைத்துத் தரப்பினரையும் அழகுபடுத்துவதற்காக தொழில்துறைக் கலைஞர்கள் அனைத்துப் பகுதிகளிலும் உருவாகி வருகின்றனர்.

வீட்டில் நடக்கும் விசேட நிகழ்ச்சிகள் எதுவாகஇருந்தாலும், அதில் பங்கேற்கும் மகளிரை அழகுபடுத்துவதற்காக அவர்களது இல்லத்தில் தங்கியிருந்து நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னர் தங்கள் "பணியை முடித்துக்கொடுக்கும் அழகுக்கலை நிபுணர்கள் அதிகளவில் உள்ளனர்.

அதேபோன்று ஆண்களைப் பொறுத்தவரை முடி திருத்துவதற்காக அமைக்கப் பட்டுள்ள ஒவ்வொரு சலூன்களும் இன்று முகத்தை அழகுபடுத்துவதிலிருந்து நரைத்த முடிக்கு கறுப்புச் சாயம் தடவி அவற்றை மறைப்பது வரை அனைத்துப் பணிகளையும் செய்து கொடுக்கின்றனர்.

வாடிக்கையாளர்களின் அபரிமிதமான நம்பிக்கையைப் பெற்றுவிட்டால் எதிர்பார்த்ததைவிட அதிக வருமானத்தைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இந்தத்துறையில் அதிகளவில் உள்ள வாடிக்கையாளரின் மனோ நிலையைத் தெரிந்து கொண்டு அவர் விருப்பத்திற்கேற்ப அவரை அழகுபடுத்துவது இத்துறையைப் பொறுத்தவரையில் சவாலான விடயமாகக் கருதப்படுகிறது. பெரும்பாலானவர்களுக்கு திருப்தி என்பது எளிதில் வந்துவிடாது.

அப்படிப்பட்டவர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் இப்பணியை ஒருவர் வெற்றிகரமாக செய்து முடித்துவிட்டால் குறிப்பிட்ட அந்த நபரின் மூலம் ஏராளமான வாடிக்கையாளர்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இத்துறையில் குவிந்து கிடக்கின்றன.

அதேபோன்று அதிருப்தியடையும் வாடிக்கையாளரால் மற்ற வாடிக்கையாளர்களை இழக்கும் அபாயமும் இதில் உள்ளது. கத்தி மேல் நடக்கும் பணி என்பதால் அழகுக் கலைக்கு தனியாகப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு சேதாரமில்லாத, தோல்களுக்கு ஒவ்வாத இரசாயனக் கலவைகள் கலக்கப் படாத சாயங்களைப் பயன்படுத்துவதிலிருந்து, விரல் நகங்களைப் பளபளப் பாக்குவது வரை சகல விடயங்களும் கற்றுக் கொடுக்கப் படுகின்றன.

சினேகபாவத்துடன் மற்றவர்களை அணுகும் தன்மை.உடற்கூறு இரகசியங்களை வெளியிடாமை புன்னகை பூத்த முகம் மற்றும் பார்க்கத் தூண்டும் உடல் அமைப்பு போன்றவை இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் அடிப்படைத் தகுதிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இத் தொழிலில் நுணுக்கங்களைக் கற்றுக் கொடுப்பதற்காக தனியார் பாடசாலைகள், கோடைகால சிறப்பு பயிற்சி நிறுவனங்கள் பெண்களுக்கான தொழில் நுட்ப நிறுவனங்கள் அதிகளவில் செயற்பட்டு வருகின்றன.

பெரும்பாலான பயிற்சி நிறுவனங்களில் விரிவுரைகள், செய்முறை நிகழ்வுகள் மூலமாக அழகுக்கலை கற்றுக்கொடுக்கப்படுகிறது.

உடற்கூறுகள், அழகு தொடர்பாக ஒவ்வொருவரின் மன நிலையைப் புரிந்து கொள்ளும்விதம் ,அடிப்படையாகத் தேவைப் படும் அழகு தொடர்பான குறிப்புகள் விரைவுகளில் தெளிவுபடுத்தப்படுகின்றன.

இந்தியாவில் அழகுக்கலை தொடர்பாக செயற்படும் பயிற்சி நிறுவணங்கள் வருமாறு, விஎல்சிசி இன்ஸ்டிடியூட் ஒஃப் பியூட்டி, ஹெல்த் அண்ட் மனேஜ்மென்ட் நியூ டில்லி, பிவோட் பொயிண்ட் இந்தியா, நியூ டில்லி அக்பர் பீர்பாய் பெண்கள் பொலி டெக்னிக் ,மும்பை செக்நாஷ் ஹெர்பல் வுமன்ஸ் வேர்ல்ட் இன்டர்நஷனல் மும்பை, வை.பிள்யு.சி.ஏ. ஒஃப் டில்லி, வுமன்ஸ் டிரெய்னிங் இன்ஸ்டிடியூட் , நியூடெல்லி - 110001, செப்ஸ் இன்ஸ்டிடியூட் ஒஃப் பேஷன் டெக்னொலஜி, மும்பை உள்ளிட்ட ஏராளமான நிறுவனங்கள் செயற்பட்டு' வருகின்றன.



வடிவமைப்பு பிரிவில் பிரத்தியேகப் பயிற்சி பெற்றவர்கள் அனைத்துத் துறைகளிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அபரிமிதமாக அமைந்துள்ளது.

வடிமைப்பாளர்களாகப் பயிற்சி பெறுபவர்கள் சவால்களை எதிர்கொண்டு வெற்றிபெறுபவர்களாகவும் ,தான் ஏற்றுக் கொண்ட துறையில் முழு ஈடுபாட்டுடன் பணியாற்ற விருப்பம் உள்ளவர்களாகவும், கற்பனைத் திறன் கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

இந்தத் தகுதிகளைப் பெற்றவர்கள் பயிற்சிக்காலத்தில் சிறந்த புள்ளிகள் பெறா விட்டாலும், பயிற்சியை நிறைவு செய்திருந்தாலே தனித் திறமைகளின் அடிப்படையில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம் .மொத்தத்தில் அழகுக் கலைஞர்களுக்காக இந்த உலகம் கைவிரித்துக்

## அறிவுக் கலசம்

வலம்புரி


ஆர்.யூ.பாலமுருகன்

# திரைப்படத்துறையில் உள்ள வேலைவாய்ப்புகள்



நடிகர்கள், இயக்குநர்கள் , துணை இயக்குநர்கள் ,தயாரிப்பாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், நடன இயக்குநர்கள், தொகுப்பாளர்கள்,ஒலி,ஒளி அமைப்பாளர்கள், அரங்க அமைப்பாளர்கள், ஒப்பனைக் கலைஞர்கள்,இசை அமைப்பாளர்கள், ஒளிப் பதிவாளர்கள் என்று ஒரு திரைப்படத்தை உருவாக்கத்திற்குத் தேவைப்படுவோர் பட்டியல் நீள்கிறது.

திரைப்படத் துறையில், பணியாற்றுபவர்கள் கற்பனைத் திறன், சமயோசிதம், இரவு,பகல் பாராத கடும் உழைப்பு என்று தங்களின் பங்களிப்பை அதிகமாகச் செலவிட வேண்டிய நிலை ஏற்படும்.



படத்தில் பங்குபெறும் ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனி வேலைகள் ஒதுக்கப் ப டிருக்கும். இதில், எல்லாவற்றையும் கற்று வைத்திருப்பவர்கள் அல்லது ஓரளவிற்குத் தெரிந்து வைத்திருப்பவர்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பின் மூலம் முன்னேற்றம் காண்பதோடு தங்களுக்கான நிரந்தரமான இடத்தை சினிமாவில் தக்கவைத்துக் கொள் ளலாம்.

எது எப்படி இருந்தாலும் சினிமா வில் திறமை, அதிர்ஷ்டம் , உழைப்பு என்பனவுக்கு முக்கி யத்துவம் கொடுக் கப்பட்டு வருகிறது. இதுமூன்றும் ஒருசேர அமைந்தவர்கள் எளி தாக வாய்பினைப் பெற்று எவரும் நினைத்துப் பார்க்க முடியாத புகழைச் சம்பாதித்துக் கொள்கின்றனர்ள.

இந்தியாவில் சினிமா சம்பந்தப்பட்ட நுணுக்கங்களைக் கற்றுக்கொடுப்பதற்காக ஏராளமான கல்விநிறுவணங்கள்செயற்பட்டுவருகின்றன.

பிலிம் அன்ட் டெலிவிஷன் இன்ஸ்டியூட் ஒப் இந்தியாவில் மூன்று ஆண்டு டிப்ளோமா படிப்பை பட்டப்படிப்பு முடித்தவர்கள் மேற்கொள்ளலாம். இங்கு இயக்கம், ஒளிப் பதிவு, காட்சித்தொகுப்புகுறித்துகற்றுத் தரப்படும். க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்றவர்கள் ஓடியோகிராபி பயிற்சி வகுப்பில் சேரலாம். நுழைவுத் தேர்வின் மூலம் விண்ணப்பதாரர்கள தேர்வு செய்யப்படுவர்.

சத்தியஜித்ராய் பிலிம் அண்ட் டெலிவிஷன் இன்ஸ்டிடியூடி மூன்று ஆண்டு டிப்ளோமா கோர்ஸ், இயக்கம் மற்றும் திரைக்கதை அமைப்பு,மோஷன் பிக்சர் போட்டோ கிராபி,காட்சித்தொகுப்பு போன்ற படிப்புக்களை பட்டப்படிப்பு முடிந்தவர்களுக்கு வழங்குகிறது.சவுண்ட் ரெக்கோடிங் பிரிவிற்கு இயற்பியலில் பட்டப்படிப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் 30 வயதிற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

தமிழநாடு பிலிம் அண்ட் டெலிவிஷன் இன்ஸ்டிடியூட், மூன்று ஆண்டு டிப்ளோமா வகுப்புக்களை, இயக்கம், திரைக்கதை அமைப்பு போன்ற துறைகளில் பட்டப் படிப்பு முடித்தவர்களுக்கு அனுமதி வழங்குகிறது.

ஒளிப்பதிவு, பிலிம் பிராசஸிங், சவுண்ட் ரெக்கோர்டிங் அண்ட் இன்ஜினியரிங் போன்ற துறைகளுக்கு க.பொ.த உயர்தரத்தில் இயற்பியல் மற்றும் வேதியியில் பாடங்களைப் படித்தவர்களுக்கும் எலெக்ட்ரிக்கல், எலெக்ட்ரோனிக் பிரிவுகளில் டிப்ளோமா முடித்தவர்கள் அனுமதிக் கப்படுகிறார்கள். காட்சித் தொகுப்புக்கு க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களும், நடிப்பிற்கான ஒரு ஆண்டு பயிற்சி க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்றவர்களும் விண்ணபிக்கலாம்.

ஜோதி சித்ராபன் பிலிம் அண்ட் டெலிவிஷன் இன்ஸ்டிடியூட், மூன்று ஆண்டு டிப்ளோமா,மோஷன் போட்டோ கிராபி, ஓடியோ கிராபி, வீடியோ எடிட்டிங் மற்றும் சினிமா, தொலைக்காட்சியில் நடிப்பதற்கான சான்றிதழ் பயிற்சிகளைக.பொ.த சாதாரண தரத்தில் சித்தி மற்றும் க.பொ.த உயர்தரத்தில் இயற்பியல், வேதியியல் முடித்தவர்களுக்கு வழங்குகிறது. இதற்கான அறிவிப்பு மார்ச் மாதத்தில் வெளியிடப்படும். இதற்காக நடத்தப்படும் எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டுமே தேர்வு செய்யப்படுவர். விண்ணப்பதாரர்கள் 23 வயதுக் குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஜுன் மாதத்தில் பயிற்சி வகுப்புக்கள் தொடங்கப்படும்.

# மன்னார் மீள்குடியேற்றக் கிராமங்களில் வடக்கின் துரித மீட்சித் திட்டம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் பல மீள்குடியேறிய கிராமங்கள் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டிருப்பதாக அதனை அமுல்படுத்தி வரும் மீள் எழுச்சித்திட்டத்தின் மன்னார் பிரதி திட்டப்பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையேயான போர் முடிவடைந்திருக்கும் நிலையில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களில் பலர் கட்டங்கட்டமாக அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு மன்னாரில் மாந்தை மேற்குப் பகுதிகளில் மீள் குடியேற்றப்பட்டிருக்கும் மக்களில் நெற்களஞ்சியப்பகுதிகளுக்குள் அடங்கும் சுமார் பத்தொன்பது கிராம அலுவலர் பிரிவுகளிலும் விடத்தல் தீவு தொடக்கம் வெள்ளாங்குளம் வரையுமான பிரதேசத்தின் பதினேழு கிராம அலுவலர் பிரிவுகளிலும் மடு பிரதேசத்தின் 13 கிராம அலுவலர் பிரிவுகளிலும் வடக்கின் துரித மீட்சித்திட்டம் உலகவங்கியின் நிதி அனுசரணையுடன் தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஊடாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டமானது மீள் குடியேறியவர்களுக்கான அவசர உதவிக் காசுக்கான வேலை மற்றும் அவசியமான பொதுப்பொருளாதார கட்டமைப்புக்களை புனரமைத்தல் எனும் மூன்று முக்கிய கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என மீள எழுச்சித்திட்டத்தின் மன்னார் பிரதி திட்டப்பணிப்பாளர், பொறியியலாளர் அ.றொபேட் பீரிட் தெரிவிக்கின்றார்.

இவற்றில் பொதுப் பொருளாதார கட்டமைப்பு புனரமைத்தல் எனும் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனம், கிராமிய உள்ளக வீதி புனரமைப்பு, பொதுகட்டடங்களை நிர்மாணித்தல் என்பன இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை அடம்பன், விடத்தல்தீவு, தேவன்பிட்டி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதான பாரிய குடிநீர் விநியோகத்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க தொண்ணூறு நாட்களை உள்ளடக்கியதான காசுக்கான வேலைத் திட்டமும் மேற்படி கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதுவித வாழ்வாதார வருமானங்களும் அற்ற நிலையில் மீள் குடியேறியிருக்கும் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படும் இத்திட்டமானது தமக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருப்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (2-4)

## வலய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாம கல்வி வலய பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 6,7 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கோட்ட மட்டங்களில் முதல் மூன்று இரண்டு இடங்களையும் பெற்ற போட்டியாளர்கள் பங்குபற்ற முடியும் எனவும் போட்டிக்கான ஒழுங்குகள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொறுப்பாசிரியர்கள் போட்டிக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வலிகாம கல்வி வலய உடற்கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

# ஐ.தே.கட்சியில் இந்திய காங்கிரஸ் கட்சி கட்டமைப்புக்கு நிகரான மறு சீரமைப்புகள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இந்திய காங்கிரஸ் கட்சி கட்டமைப்பிற்கு நிகரான மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென சில கட்சி உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக ஐக்கிய தேசிய கட்சி அடைந்து வரும் தொடர் தேர்தல் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென கட்சியின் பல்வேறு மட்டத்தினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதற்கமைய இந்திய காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பை போன்றதொரு கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கட்சித் தலைமைத்துவம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளுக்கு இதன் மூலம் தீர்வு காண முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

கட்சி நிர்வாகத் தலைமையை சஜித் பிரேமதாஸவிடமும் கட்சித் தலைமைப் பொறுப்பை ரணில் விக்ரமசிங்கவிடமும் ஒப்படைக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாச கிராம மட்ட மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டுள்ள போதிலும் ரணில் விக்ரமசிங்கவிற்கு சர்வதேச ரீதியில் அதிகளவு நன்மதிப்பு காணப்படுவதாகத் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-4)

# வடக்கு- கிழக்கில் கணவனை இழந்த பெண்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும்

## திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் வாழும் கணவனை இழந்த பெண்களின் நலன் தொடர்பாக எதிர்காலத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

யுத்தம் மற்றும் சுனாமி பேரழிவு காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் பெரும் எண்ணிக்கையான பெண்கள் தமது கணவன்மாரை இழந்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். இந்த பெண்களினதும் அவர்களின் பெண்களினதும் உள நலத்தை மேம்படுத்துவது தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

இதற்கான செயற்றிட்டங்கள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் இந்த திட்டங்கள் முன்னெடுக்கபடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது அமைச்சின் பிரதியமைச்சர் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதால் இது தொடர்பாக ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளை செய்வதற்கான பொறுப்பை அவரிடம் ஒப்படைத்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(2-4)

# அனர்த்தங்களை எதிர்கொள்ள விசேட படையணி ஸ்தாபிக்கப்படவுள்ளது

## நீர்ப்பாசன நீர்வளமுகாமைத்துவ அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

அனர்த்தங்கள் ஏற்படும் போது அதனை எதிர்கொள்ளக்கூடிய விசேட பாதுகாப்பு படையணியை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரதான தீர்த்தேக்கங்களை அண்மித்த பகுதிகளில் அனர்த்தங்கள் ஏற்படும் போது உடனடி நடவடிக்கை மேற்கொள்வதே இதன் நோக்கமென நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு குறிப்பிட்டது.

இந்த படையணியின் வீரர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் மகாவலி அதிகாரசபை ஆகியவற்றுக்குரிய பாரிய அளவிலாள நீர்த்தேக்கங்கள் பல்வேறு பகுதிகளிலும் உள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பிற்காக 980 பேர் கொண்டபடையணி உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே இவர்களின் பிரதான கடமையாக அமைந்துள்ள தெனவும் நாட்டில் அமைதியான சூழல் ஏற்பட்டுள்ளதால் இந்த படையணியை அனர்த்தங்களின் பொழுது செயற்படக்கூடிய பாதுகாப்பு படையணியாக மாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் பிரகாரம் அவர்களுக்கு அனர்த்தங்களின் போது செயற்படக்கூடியவாறு நீச்சல் உள்ளிட்ட பயிற்சிகளை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2-4)

# பதவி வெற்றிடம்

**பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

- உதவி ஆசிரியர் (இருபாலாரும்)
- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- பிரதேச அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள்)
- பிரதேச செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- சித்திரப்பு கட்டுரையாளர்கள் (Feature Writer) (இருபாலாரும்)
- ஒப்பு நோக்குனர் (Proof Reader) (இருபாலாரும்)
- கணனி பக்க வடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்)
- ஒவ்செற் இயந்திரம் இயக்குநர்கள் மற்றும் பயிலுநர்கள் (ஆண்கள்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலாரும்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)

குறிப்பு:-

விண்ணப்பதாரி ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு தனித் தனியாக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 15.05.2010

விண்ணப்பங்கள் யாவும்

பொது முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

........................................................ பதவிக்கான விண்ணப்பம்

அலுவலகப் பாவனைக்கு

| | | |
|---|---|---|
| 01. | முழுப்பெயர் | :-........................................ |
| 02. | நிரந்தர முகவரி | :-........................................ |
| 03. | தற்காலிக முகவரி (இருப்பின்) | :-........................................ |
| 04. | தொலைபேசி இலக்கம் | :-........................................ |
| 05. | பிறந்த திகதி | :-........................................ |
| 06. | பால் | :-........................................ |
| 07. | விவாகமானவரா | :-........................................ |
| 08. | தே.அ.அ.இல | :-........................................ |
| 09. | கல்வித் தகைமை | :-........................................ |
| 10. | க.பொ.த. (சா/தரம்) | :-........................................ |
| 11. | க.பொ.த (உயர்தரம்) | :-........................................ |
| 12. | மேலதிக தகைமைகள் | :-........................................ |

மேற்கூறப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. ..............................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

அநாதைகளின் தலை மேல் நாவிதர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.

—அரேபியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஆண்ட நீ அருளில்லையானால்...

'ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய்' இது மாணிக்கவாசக சுவாமி களின் சிவபுராண வரிகள்.

உலகம் இயங்க தாண்டவம் ஆடும் நடராஜப் பெருமானின் செயல்களை வர்ணிப்பதாக இவை அமைகின்றன.

இந்த வர்ணனை ஆன்மாக்கள் தொடர்பில் இறைவனின் நிகழ்ச்சி நிரலை பட்டியல் படுத்துவதாகும்.

நிகழ்ச்சி நிரல் எல்லாமும் நடந்தேறும் என்பது பொருள் அல்ல.

சில நிகழ்ச்சிகள் நடக்காமல் போவதும் உண்டு.

அதாவது, இலங்கையின் முறைசார்ந்த கல்வியில் க.பொ.த. (சாதாரண) தரம், க.பொ.த. (உயர்) தரம், பல்கலைக்கழகம் என்ற படிமுறைகள் உண்டு.

இப்படி முறைகள் உண்டென்பதற்காக எல்லோரும் க.பொ.த. சாதாரணதரத்தில் கற்பதும் சித்தியடைவதுமென்றோ,

அல்லது உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்வதென்பதோ இல்லை.

சாதாரணதரப் படிப்புடன் கல்விக்கு முடிவு கட்டும் சூழ்நிலைகளும் பலருக்கு ஏற்பட்டதுண்டு.

எனவே நிகழ்ச்சி நிரல்கள் அனைத்தும் நாம் நினைப்பது போல அல்லது நாம் திட்டமிடுவது போல நடந்தேறுவதில்லை.

இவ்விதம் நிகழ்ச்சி நிரல் முழுமையாக நடந்தேறாமல் போகும் சந்தர்ப்பத்தில், துறை சார்ந்தவர்கள் விமர்சிக்க முற்படுவர்.

தவறான திட்டமிடல் என்று ஒரு சாராரும், அணுகுமுறை பிழை என்று இன்னொரு தரப்பும், எடுத்த தீர்மானம்தான் இத்தனை தோல்விக்கும் காரணம் என்று இன்னோர் வகுதியினரும் கூறுவர். இவை அவரவர் ஆற்றலுக்கும் அறிவியல் பரப்புக்கும் அமையக் கூறப்படுபவை.

இதில் யார் கூறுவது சரி, பிழை என்று வாதிடுவது தொல்லை தரும் விடயமாகும்.

எனினும் நிகழ்ச்சி நிரல் நடைபெறாமல் போனமைக்கான காரணம் என்ன என்பதை ஞானிகளிடம் கேட்டால் அவர்கள் 'விதி' என்று சொல்லி முடிப்பர்.

எல்லாம் அவன் செயல் என்பதோடு, தோல்வியும் வெற்றியும் முற்றுப் பெறா முடிவுகளும், ஜீரணிக்கப்படுகின்றன. இதுவே யதார்த்தம்.

இந்த யதார்த்தத்தை இவ் விடத்தில் ஏன் கூற வேண்டும் என்பதுதான் இப்போது இருக்கக் கூடிய சந்தேகம்.

ஆம், மீண்டும் மாணிக்கவாசகரிடம் சென்றால் ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய் என்ற ஒழுங்கு முறைக்கும் எங்கள் மீதான இந்தியாவின் நடைமுறைக்கும் தொடர்பு உண்டு.

இயக்கங்களை தோற்றிவித்ததும் அவற்றைக் காப்பாற்றியதும், அழித்ததும் இந்தியாவே.

இப்போது அந்த இந்தியா ஏதேனும் அருளுமா என்பது எங்களின் கைகளில்தான் உண்டு.

உருவாக்கி, பாதுகாத்து பின்னர் அழித்த இந்தியா அருளாவிட்டால் எல்லாமே துன்பமாகிவிடும்.

எனவே, இந்தியாவை சிக்கெனப்பிடித்து காரியத்தை கச்சிதமாக முடிக்க வேண்டும்.

# அரசின் முன்னணி நிறுவனங்கள் ஏழு 45பில். ரூபாய்களை இழந்துள்ளன

## மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

அரசின் 7 முன்னணி நிறுவனங்கள் கடந்த வருடம் 45 பில்லியன் ரூபாய்களை இழந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் 2009ஆம் ஆண்டுக்கான அறிக்கை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது;

அரச நிறுவனங்களின் தவறான முகாமைத்துவங்களால் கடந்த வருடம் 7 அரச நிறுவனங்கள் 45 பில்லியன் ரூபாய்களை இழந்துள்ளன. இதில் சிலோன் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் மிகவும் கடுமையாக பாதிப்படைந்துள்ளது. அது கடந்த வருடம் 12.3 பில்லியன் ரூபாய்களை இழந்துள்ளது.

துறைமுகங்கள் அதிகார சபை 4.638 பில்லியன் ரூபாய்களையும் சிலோன் போக்குவரத்துச்சபை 5.183 பில்லியன் ரூபாய்களையும் இழந்துள்ளன. ஆனால் கடந்த வருடம் அரசு போக்கு வரத்துக் கட்டணங்களை 5.3 விகிதத்தால் அதிகரித்திருந்தது.

புகையிரத சேவை 4 ஆயிரத்து 768 மில்லியன் ரூபாய்களை இழந்துள்ளது. அதே சமயம் வான் போக்குவரத்துச் சேவை 12.2 பில்லியன் ரூபாய்களையிழந்துள்ளது. வான் போக்குவரத்துச்சேவையை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கைகள் கடந்த வருடம் 24.1 வீதத்தினால் குறைவடைந்துள்ளது. இதனிடையே மிகின் விமான சேவை 930 மில்லியன் ரூபாய்கள் இழப்பீட்டை சந்தித்துள்ளது.

ஒரு நாட்டின் முக்கிய துறைகளான மின் உற்பத்தி, எரிபொருள்துறை, பயணிகள் போக்குவரத்துத்துறை, தபால் சேவைகள் என்பன வீழ்ச்சியடைந்துள்ளது அந்த நாட்டின் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கான அறிகுறிகள் என அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# இலங்கை போர்க்குற்றங்கள் விடயத்தில் ஆசிய பாணியிலான முறை பயனளிக்காது

## மனித உரிமை கண்காணிப்பக ஆய்வாளர் தெரிவிப்பு

படையினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான இறுதிகட்டப் போரின் போது இடம்பெற்றதாகக் கருதப்படும் மிகக் கொடூரமான மனித உரிமை மீறல்கள், படுகொலை நடவடிக்கைகள், போர்க் குற்றங்கள் என்பவற்றிற்கு காரணமானவர்கள் விடயத்தில் ஆசிய முறையிலான இராஜதந்திரம் பயனளிக்கும் என்ற சிந்தனையிலிருந்து இந்தியாவும், யப்பானும் வெளியே வரவேண்டும்.

இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசியப் பிராந்திய ஆய்வாளரான மீனாட்சி கங்குலி தமது ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தப் போரின் போது நடைபெற்ற மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் போரில் ஈடுபட்ட இருதரப்பினரையும் சர்வதேச சமூகமும், மனித உரிமை அமைப்புக்களும் கண்டித்திருந்தன

தற்போது இப்போர் முடிவுக்கு வந்து விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் முடக்கப்பட்ட பின்னர் இத்தகைய குற்றச் சாட்டுக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினதும் அவர் சார்ந்த அரசினதும் கடமையாகும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுவிட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்து சுமார் ஒரு வருடகாலமாகின்றது. ஆனால் இப்போரின் இறுதி ஆறு மாத காலத்தில் நடைபெற்ற கொடூரத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

தமிழ் மக்களின் விடுதலை கோரி நடத்தப்பட்ட விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்தரித்து சர்வதேச நாடுகளின் உதவியுடன் அப்போராட்டத்தை நசுக்கிவிட்டு பயங்கரவாதத்தை வெற்றி கொண்டுவிட்டதாக மகிந்த ராஜபக்ஷ பெருமை பேசித் திரிகின்றார்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என சர்வதேச சமூகம் இலங்கை ஜனாதிபதியை வலியுறுத்தி வருகின்ற போதிலும், அவர் அதனை செவிமடுக்கவில்லை.

இந்நிலையில் போரை வெற்றி கொண்ட ஒரு வருட நிறைவை விமர்சையாகக் கொண்டாடவும், இம்மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை போரில் உயிரிழந்த படையினரின் நினைவாக போர்க் கதாநாயகர்கள் வாரத்தையும் (ரணவிரு சத்திய) அனுஷ்டிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மிகக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக போர்க் குற்ற விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவும் சர்வதேச நாடுகளும் வலியுறுத்தி இருந்தன.

இத்தகைய பின்னணியிலேயே போர்க் குற்றங்கள் மற்றும் மோசமான மனித உரிமை மீறல்கள் போன்ற நடவடிக்கைகளுக்குக் காரணமானவர்களை அவற்றுக்குப் பொறுப்பாக்கும் நடவடிக்கைகளை ஆசிய வழியிலான இராஜதந்திரம் மூலம் அரசைக் கொண்டு ஒப்பேற்றலாம் என்ற சிந்தனையை இந்தியாவும், யப்பானும் கைவிட வேண்டும் என்பதை தனது ஆய்வில் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்ட போரின் போது மட்டுமல்ல, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவியேற்ற நாள் முதல் 2006 வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற முக்கிய பதினாறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்க இதே ஜனாதிபதியால் ஒரு விசேட ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இவ் விசாரணை நடவடிக்கை ஓர் அர்த்தமற்ற செயல் என்பதை அதன் செயற்பாடுகளை உன்னிப்பாகவும், நேரடியாகவும் கண்காணித்த சர்வதேச அவதானிகள் குழு பகிரங்க அறிக்கை மூலம் வெளியிட்டிருந்ததோடு இது தொடர்பான பொறுப்புக்களில் இருந்தும் வெளியேறி இருந்தது.

இந்நிலையில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக உரியவர்களைப் பொறுப்பாக்கும் நடவடிக்கைகளை அமைதி வழியிலான இராஜதந்திரம் மூலம் அரசை முன்னெடுக்க வைக்கலாம் என நம்புவது ஒரு பகற்கனவாகவே அமையும் என இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சைகள்

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி ஆரம்பக் கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் த.ஶ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார்.

கல்வி வலயத்தின் 4ஆவது பரீட்சைத் தொடர் நாளை செவ்வாய்க்கிழமையும் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் முதலாம் பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு திட்டமிட்டபடி நடைபெறும்.

வழமை போன்று பயிற்சி பரீட்சைக்கான வினாப்பத்திரங்களை பரீட்சை தினத்தன்று வலயக்கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஶ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார். (ச)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## பல்சுவை

தற்காலத்தில் ஒருவன் மோசஸ், இயேசு கிறிஸ்து, புத்தர் ஆகியவர்களின் மேற்கோளை எடுத்துக் காட்டாகச்சொன்னால், அவன் ஏளனத்துக்கு ஆளாகின்றான். ஆனால் ஒரு ஹக்ஸ்லி, டின்டால் டார்வின் ஆகிய இவர்களின் பெயர்களை அவன் சொல்லட்டும் அவர்களுடைய கருத்து என்னவாக இருந்தாலும் மக்கள் அதை அப்படியே கேள்விக்கிடமின்றி நம்பிடுவிடுவார்கள் *ஹக்ஸ்லி இப்படிச் சொல்லியிருக்கிறார்* என்று குறிப்பிட்டால் அதுவே பலருக்குப் போதுமானதாக இருக்கிறது. நாம் மூட நம்பிக்கையிலிருந்து விடுபட்டவர்கள் தாம் என்றாலும், முன்பு கூறியது மத வாழ்க்கையைச் சேர்ந்த மூட நம்பிக்கையாக இருந்தது. பின்னால் குறிப்பிட்ட இது, விஞ்ஞான ரீதியான மூடநம்பிக்கையாக இருக்கிறது. மதத்தைச் சேர்ந்த மூடநம்பிக்கைகளின் மூலமாகத்தான் உயிரோட்டம் தரக்கூடிய ஆன்மீகக் கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன. விஞ்ஞான ரீதியான இன்றைய இந்த மூட நம்பிக்கையின் மூலமாகவே காமமும் பேராசையும் விளைந்திருக்கின்றன. முதலில் கூறிய மூடநம்பிக்கை கடவுள் வழிபாடாக இருந்தது. பின்னால் கூறிய இதுவோ அருவருக்கத் தக்க செல்வம் புகழ் அதிகாரம் ஆகியவற்றின் வழிபாடாக இருக்கிறது. இதுதான் இந்த இரண்டு மூட நம்பிக்கைகளுக்கும் உள்ள வேறுபாடு.

# ஊடகம், உயர்கல்வி, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சுகள் கண்டிக்கு வழங்கப்படலாம்

## திவயின செய்தி

(கொழும்பு)

ஊடகம், உயர் கல்வி மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பம் ஆகிய அமைச்சுக்கள் கண்டி மாவட்டத்திற்கு வழங்கப்படலாம் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் கண்டி மாவட்டத்தில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு உயர் கல்வி அமைச்சுப் பொறுப்பும் சரத் அமுனுகமவிற்கு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சும் கெஹலிய ரம்புக்வெலவிற்கு ஊடக அமைச்சுப் பொறுப்பும் மஹிந்தானந்த அலுத்கமவிற்கு பிரதி இளைஞர் விவகார அமைச்சுப் பொறுப்பும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# அமைச்சுக்களுக்குத் தேவையான நிதியை வழங்குமாறு திறைசேரிக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

அமைச்சுக்களின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை வழங்குமாறு திறைசேரிக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அடுத்த மூன்று மாத காலத்திற்குத் தேவையான நிதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதியமைச்சர் என்ற வகையில் திறைசேரி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவுக்கு கடந்த வெள்ளி உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத நிலையில் முதல் நான்கு மாதங்களுக்கான கணக்கு வாக்கெடுப்பையே கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. அக்கணக்கு வாக்கெடுப்பின் செலவினங்களுக்கான கால எல்லை ஏப்ரல் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டமை குறிப்பிடத்தக்கது.

வரவு செலவுத்திட்டமொன்று நிறைவேற்றப்படும் வரை அமைச்சுக்களுக்குத் தேவையான நிதியை திறைசேரியிலிருந்து ஒதுக்குவதற்குஅரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (2-4)

# இராணுவ நீதிமன்ற விசாரணைகளுக்கு சமுகமளிக்காது நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ள முடிவு



## சரத்பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

நாளையும் நாளை மறுதினமும் தனக்கு எதிராக நடைபெறும் இராணுவ நீதிமன்ற விசாரணைகளுக்கு சமூமளிக்காது நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்வதென ஜனநாயக தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகா தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

பொன்சேகாவுக்கு எதிராக இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணைகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. இந்த இரண்டு தினங்களிலும் தான் நாடாளுமன்றத்திற்கு சமுகமளிக்க உள்ளதாகவும் இராணுவ நீதிமன்றத்தை விட நாடாளுமன்றத்திற்கே முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சபாநாயகர் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி யேற்ற பின்னர் முதலாவது நாடாளு மன்றம் நாளை கூடவுள்ளதுடன் அன் றைய தினம் அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத் திற்கு நீடிக்கும் யோச னை விவாதத் திற்கு எடுத்து கொள்ளப்படவுள்ளது. இந்த விவாதத்தில் எதிர்க்கட்சிகளின் சார்பில் ஜெனரல் சரத் பொன்சேகா ஆரம்ப உரையை ஆற்றவுள்ளார். (2-4)

# பாலஸ்தாபன அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் பானாவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலய பாலஸ்தாபன அபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறவுள்ளது. இதில் காலை கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து அபிஷேகம் நடைபெறவுள்ளது. (4)

# புதையல் அகழ்வதற்கு முயன்ற ஐவர் பொலிஸாரால் கைது

## உப்புவெளிக் காட்டுப் பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

உப்புவெளி காட்டுப் பகுதியில் புதையல் அகழ்வதற்கு முயன்ற 5 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்கே நபர்கள் கிண்ணியா, மூதூர், சீனன் குடா மற்றும் நிலாவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து காரொன்றும் 4 கையடக்க தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

புதையல் அகழ்வதற்கு முயற்சித்த மேலும் 6சந்தேக நபர்கள் தப்பிச் சென்றதாகவும் பொலிஸார் கூறினர். கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-4)

# தொழிலாளர் வர்க்கத்தில் பெண்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்

## பதுளையில் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் வலியுறுத்தல்

(கொழும்பு)

தொழிலாளர் வர்க்கத்தில் பெண் தொழிலாளர்களே கூடுதலான பல்வேறு சிரமங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.

குறிப்பாக மலையகப் பெண் தொழிலாளர்களே பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் உரிமை, சுதந்திரம், வேலைக்கேற்ற ஊதியம் என்பன நியாயமாக வழங்கப்படுவதில்லை ஆகையினால் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் உழைக்கும் மலையக பெண்தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் கட்டாயமாக உள்ளூராட்சி சபைகளில் இடம்பெற வேண்டும். அதற்காக பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிலா ளர்களாக உழைக்கும் பெண்கள் முன்வந்து ஒன்றுபட வேண்டும்.

உலக மயமாக்கலின் தாக்கம் தொழிலாளர்களின் பாதிப்பை வலியுறுத்தும். விழிப்புணர்வும் சிந்தனைப்போக்கும் இன்னும் தொழிலாளர்களைச் சென்று சேரவில்லை. அதற்கு ஐக்கியப்பட்ட தொழிற்சங்க முன்னெடுப்புகளே வழிகூறும். இது இன்றைய காலகட்டத்தின் அவசியத் தேவையாகும். அதனொரு அம்சமே ஐக்கிய மே தினக் கூட்டமாகும் என பதுளை வை.எம்.பீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய மே தின கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இந்த மேதினக் கூட்டத்தை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட பொது ஊழியர் சங்கம் பெண்கள் அமைப்பு, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ,பதுளை மாவட்டக் கிளை என்பன கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன. (2-4)


# ஸ்ரீதுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு ஒருவர் கொலை

(கொழும்பு)

ஸ்ரீ துவ லயனகே முல்ல பகுதியில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உறவினர் வீட்டிற்கு சென்றிருந்த போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதனால் இந்தக் கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

களுத்துறை வடக்கைச் சேர்ந்த 36 வயதான ஒருவரே கொலைசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. கொலைசெய்யப்பட்டவரின் சடலம் சேதுவ விஜயகுமாரதுங்க வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (2-4)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சிபெறும் 19 ஆசிரிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தை கரித்தாஸ் -கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி ஈ.ஜீ. ஜெயக்குமார் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

# டெல்லியை தகர்க்க தீவிரவாதிகள் சதி!

## அமெரிக்கா மூன்றாவது தடவை எச்சரிக்கை

டெல்லியை தகர்க்க தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டி இருப்பதாக அமெரிக்க அரசு நேற்று முன்தினம் மீண்டும் எச்சரிக்கை வெளியிட்டது. இது கடந்த ஒரு மாதத்தில் அமெரிக்கா வெளியிடும் மூன்றாவது எச்சரிக்கை ஆகும். இதைத் தொடர்ந்து டெல்லியில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது . தீவிரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்க பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு விடுப்புக் கிடையாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே விடுப்பில் சென்றவர்கள் உடனடியாக பணியில்சேர உத்தரவிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில், பீதியடைய வேண்டாம் என்றும் மத்திய உள்துறை பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது. டெல்லி நகர எல்லைகளுக்கு சீல் வைக்கப்பட்டு வாகன சோதனை நடத்தப்படுகிறது.

டெல்லியைத் தகர்க்க தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க அரசு கடந்த மாதம் 16 ஆம் திகதி திடீர் எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்தியாவில் தங்கி உள்ள அமெரிக்கர்கள் மற்றும் சுற்றுலா சென்றுள்ளவர்களுக்காக இந்த பயண எச்சரிக்கையை வெளியிட்டதாக அமெரிக்கா அப்போது தெரிவித்தது. அமெரிக்க அரசுக்கு கிடைத்த உளவுத்தகவல்கள் அடிப்படையில் இந்த எச்சரிக்கை வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து டெல்லியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி இரண்டாவது எச்சரிக்கையை அமெரிக்கா வெளியிட்டது. அதில் , தீவிரவாதிகள் குறிவைத்துள்ள இடங்கள் பற்றிய விபரங்கள் இடம்பெற்றிருந்தன. வெளிநாட்டினர் குறிப்பாக அமெரிக்கர்கள் நடமாட்டம் அதிகம் உள்ள சுற்றுலா சந்தைப் பகுதிகளில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று குறப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் டில்லிக்கு எந்தநேரத்திலும் அபாயம் என்றும் அமெரிக்க அரசு மூன்றாவது எச்சரிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டது. ஏற்கனவே வெளியிடப்பட்ட இரண்டு எச்சரிக்கைக ளை யும் மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட இந்த எச்சரிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

டெல்லியில் அமெரிக்கர்கள் அல்லது மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்களின் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளை குறிவைத்து தீவிரவாதிகள் ஏற்கனவே பல தாக்குதல்களை நடத்தியுள்னர். இப்போதும் அதேபோல் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளனர். எந்தநேரத்திலும் தீவிரவாதத் தாக்குதல் நடத்தலாம். இதனால் டெல்லியின் முக்கிய சந்தைப்பகுதிகளுக்கு செல்வதை அமெரிக்கர்கள் தவிர்க்கவேண்டும. வெளியே செல்லும் போது கவனத்துடன் இருக்க வேண்டும். அனாதையாக கிடக்கும் பொருட்கள் அல்லது பார்சல் கிடந்தால் அந்தப் பகுதியைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டும். பொலிசுக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும்.இந்தியாவில் வசிக்கும் அல்லது சுற்றுலா சென்றுள்ள அமெரிக்கர்கள் தங்களைப்பாதுகாத்துக்கொள்ள எப்போதும் உஷாராக இருக்கவேண்டும் இவ்வாறு அமெரிக்க அரசு கூறியுள்ளது. (4)

# போர் நிறைவடைந்துள்ள போதிலும்
# தமிழரின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை

நான்காவது ஈழப்போர் நிறைவு பெற்று ஒரு வருடம் அண்மித்துள்ள நிலையிலும் போர் வெற்றி தொடர்பான பேச்சுக்கள் தென்னிலங்கையில் ஓயவில்லை. ஆனால் மறுபுறம் அதனால் பாதிப்படைந்த தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் கூட தீர்க்கப்படவில்லை.

தற்போதும் ஏறத்தாழ ஒரு இலட்சம் தமிழ் மக்கள் வவுனியாவிலும், வடக்கில் உள்ள ஏனைய பகுதிகளிலும் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் இலங்கையில் அமைதி ஏற்பட்டுள்ளது. அங்கு போர் நிறைவடைந்துள்ளது என்ற சூழ்நிலைகளை தோற்றுவிப்பதற்கான புறச் சூழல்களும் இலங்கையில் ஏற்படுத்தப்படவில்லை. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்றவை நீக்கப்படவில்லை. வடக்கு-கிழக்கில் படையினரின் பிரசன்னம் குறையவில்லை. உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவில்லை.

இலங்கை என்ற தேசத்தின் அளவுக்கு தற்போது உள்ள படையினரின் எண்ணிக்கை என்பதும் மிக அதிகம். மேலும் அவர்களை பராமரிப்பதில் ஏற்பட்டுவரும் செலவீனங்களும் அதிகம். இலங்கை இராணுவத்தை பொறுத்தவரையில் ஈழத்தமிழ் மக்களை படைத்துறை ஆளுமைக்குள் வைத்திருக்கும் நோக்கத்துடன் கடந்த அறுபது வருடங்களாக அது வளர்க்கப்பட்டுள்ளது. ஆட்தொகையில் பிரித்தானியாவின் இராணுவத்தை விட அதிக பருமனுள்ள படைக்கட்டமைப்பாக அது தோற்றம் பெற்று நிற்கின்றது.

பிரித்தானியா இராணுவத்தை பொறுத்தவரையில் 2009ஆம் ஆண்டு ஜுன் மாதம் வெளியிட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அது 6 டிவிசன்களை கொண்ட 146,000 வீரர்களை கொண்டது. ஆனால் இலங்கை இராணுவம் தற்போது 300,000 படையினரை கொண்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கடந்த வாரம் தெரிவித்துள்ளார். மேலும் 50,000 பேரை இணைத்துக் கொள்ளவும் அரச தரப்பு முயன்று வருகின்றது.

இலங்கையின் இராணுவ வரலாற்றை நோக்கினால் அகிம்சைப் போரில் நம்பிக்கையிழந்த தமிழினம் ஆயுதப் போரின் மீது நம்பிக்கை கொண்டு மெல்ல மெல்ல வளர்ச்சி கண்டபோது இலங்கை இராணுவம் தன்னை வளர்த்துக் கொண்டது. 1970களில் அதன் எண்ணிக்கை 8500 ஆக அதிகரித்திருந்தது.

விடுதலைப்புலிகள் 1970களில் தோற்றம் பெற்ற போதும் அவர்களின் தாக்குதல்கள் 70களில் நடுப்பகுதியில் அதிகரித்தது. எனினும் 1981 இல் தான் சீருடை தரித்த இராணுவத்தினர் மீதான தாக்குதலை விடுதலைப்புலிகள் முதலில் மேற்கொண்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் முதல் தாக்குதல் தளபதியான லெப்.சீலன், கப்டன் லாலா ரஞ்சன், லெப் கேணல் புலேந்திரன் ஆகியோர் மேற்கொண்ட தாக்குதலில் யாழ்ப்பாணம் நகரப்பகுதியின் காங்கேசன்துறை வீதியில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களின் தீவிரத்தை தொடர்ந்து இலங்கை அரசு தனது இராணுவத்தினரின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்திருந்தது. 1983களில் இராணுவம் 12,000 பேரை கொண்டிருந்தது.

அது பின்னர் 1986களில் 30,000 பேரை கொண்டதாக மாற்றம் பெற்றிருந்தது. எனினும் 1987களில் யாழ். குடாநாட்டின் மீதான ஒபரேசன் லிபரேசன் நடவடிக்கைக்காக மேலும் 10,000 இராணுவத்தினர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

இந்திய இராணுவத்தின் நடவடிக்கை காலப்பகுதியில் இராணுவத்தில் அதிக மாற்றங்கள் இடம்பெறவில்லை. ஆனால் இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் அன்றைய பிரேமதாசா அரசு மேலும் படைபல அதிகரிப்புக்களை மேற்கொண்டிருந்தது.

1990களில் 50,000 ஆக இராணுவத்தின் பலம் உயர்த்தப்பட்டது. ஏறத்தாள நான்கு வருடங்கள் நடைபெற்ற இரண்டாவது ஈழப்போரின் முடிவான 1994களில் இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கை 104,000 ஆக உயர்ந்திருந்தது.

மூன்றாவது ஈழப்போரின் ஆரம்பம் படை யினருக்கு பாரிய உளவியல் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. விடுதலைப் புலிகளின் வான் எதிர்ப்பு பிரிவினரின் ஏவுகணை தாக்கு தல்களில் விமானங்கள் வீழ்ந்து நொருங்கியமை படையினர் மத்தியில் பாரிய அச்சங் களை தோற்றுவித்திருந்தன.

இந்த காலப்பகுதியில் படையில் இருந்து தப்பியோடுவோரின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்திருந்தது. 1994ஆம் ஆண்டு 104,000 படையினரரை கொண்டிருந்த இராணுவத்தின் பலம் 1996களில் 90,000 ஆக வீழ்ச்சி கண்டிருந்தது.

எனினும் 1994 ஆம் ஆண்டு வரையில் மூன்று கட்டளைப்பீடங்களையும் பல பிரிகேட் தலைமையகங்களையும் கொண்டிருந்த இராணுவத்தின் கட்டமைப்புக்கள் முழுமையான போருக்கு ஏற்ற வகையில் மறு சீரமைக்கப்பட்டது.



அன்றைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தயினால் இந்த மறுசீரமைப்புக்கள் 1995களில் மேற்கொள்ளப் பட்டன. 1995 ஆம் ஆண்டு 51,52,53 ஆவது படையணிகள் உருவாக்கப்பட்டன. முன்னர் நடவடிக்கை படையணியாக இருந்த படையணிகளே டிவிசன்களாக தரமுயர்த்தப்பட்டன.

அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பல பாரிய படை நடிவடிக்கைகளுக்கு ஏற்ப மேலும் பல டிவிசன்கள் உருவாக்கப்பட்டன. 1997 ஆம் ஆண்டு வரையிலும் 54,55,56 ஆவது படையணிகள் உருவாக்கப்பட்டன. ஆனால் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஓயாத அலைகள்-மூன்று மற்றும் ஆனையிறவு தளம் மீதான தாக்குதல்களில் 54 ஆவது படையணி முழுமையான சேதமடைந்ததை தொடர்ந்து அது பின்னர் கலைக்கப்பட்டது.

இருந்த போதும் 2001 ஆண்டின் இறுதிப் பகுதியில் போரின் தீவிரம் குறைந்த போது இராணுவம் ஒன்பது டிவிசன்களை கொண்ட 95,000 படையினரை கொண்டிருந்தது. 11, 21, 22, 23, 51, 52, 53, 55, 56 டிவிசன்களை அன்று இராணுவம் கொண்டிருந்தது.

பின்னர் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டை தொடர்ந்து இந்த டிவிசன்கள் புதிய படையினரை கொண்டு மறுசீரமைக்கப்பட்டிருந்தன. அதன் எண்ணிக்கையும் 118,000 ஆக அதிகரித்திருந்தது.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மகிந்த ராஜபக்ஷ அரச தலைவராக பதவியேற்ற பின்னர் படையினர் தரப்பில் மேலும் பல மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. 2006ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் உக்கிரமடைந்ததை தொடர்ந்து இலங்கை இராணுவம் தனது படை பலத்தை மேலும் அதிகரித்து கொண்டது.

கடந்த வருடத்தின் ஆரம்பித்தில் கிளிநொச்சி இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் ஏப்ரல் மாதம் முல்லைதீவின் நந்திக் கடல் நீரோரிக்கு அண்மையாக சில கி.மீ பரப்பளவுக்குள் விடுதலைப்புலிகளின் படையணிகளையும், பொதுமக்களையும் இலங்கை இராணுவம் சுற்றிவளைத்த போது அது 20 டிவின்சன்களை கொண்டதாக இருந்தது.

அதாவது இந்த காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தில் 11, 21, 22, 23, 51, 52, 53, 55, 56, 57, 58, 59, 61 ஆகிய டிவிசன்களும் நடவடிக்கை படையணிகளான இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு மற்றும் எட்டு என்பனவும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

வடபகுதியில் நிலை கொண்டுள்ள இந்த நடவடிக்கை படையணிகளில் நடவடிக்கை படையணி நான்கு, நடவடிக்கை படையணி ஐந்து, நடவடிக்கை படையணி எட்டு என்பன டிவிசன் நிலைக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்த டிவிசன் படையணிகளுடன் மேலும் ஒரு புதிய டிவிசன் (65 ஆவது படையணி) படைபணியும் தற்போது போர் நிறைவடைந்த பின்னர் உருவாக்கப்பட்டுள்ளது. டிவிசன்களை விட நடவடிக்கை படையணிகள் படையினரின் எண்ணிக்கையை குறைவாக கொண்டிருந்த போதும் அதன் கட்டமைப்பின் அது டிவிசனின் தரத்தையே கொண்டிருந்தது. எனவே தான் அவையும் டிவிசன் படையணிகளாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

இராணுவம் கடந்த மே மாதம் மரபு வழியிலான சமரை நிறைவு செய்துள்ளதாக அறிவித்த போது 265 பற்றலியன்களை உள்ளடக்கிய 20 டிவிசன்களை கொண்ட 240,000 படையினரை இலங்கை இராணுவம் கொண்டிருந்தது.

எனினும் அது தற்போது 300,000 படையினரை கொண்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்லாது இலங்கையின் முப்படையினரினதும் எண்ணிக்கைகள் 450,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் தற்போதைய எண்ணிக்கை பிரித்தானியா இராணுவத்தின் எண்ணிக்கையை விட 50 விகிதம் அதிகமாகும். விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்காக பல பிராந்திய வல்லரசுகளின் துணையுடன் ஊதிப் பெருத்துள்ள இந்த இராணுவம் இலங்கையின் பொருளாதாரத்தையும் பெருமளவில் ஏப்பம் விட்டு வருவதுடன், தீவிரமடைந்த போரும் இலங்கைக்கு அதிக சேதங்களை உண்டு பண்ணியிருந்தது.

2009ஆம் ஆண்டுக்கான இலங்கைகான பாதுகாப்பு செலவீனம் 169 பில்லியன் ரூபாய்கள் (1.6பில்லியன் டொலர்களாகும்) இது இலங்கையின் மொத்த உற்பத்தியில் அல்லது மொத்த வருமானத்தில் 5 சதவிகிதத்திற்கும் அதிகம். இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் விகிதங்களுடன் ஒப்பிடும் போது இது இரு மடங்கு அதிகமாகும்.

இலங்கை அரசு தற்போது தனது படை பலத்தை போரில் உள்ள நிலையிலேயே பராமரித்து வருவதால் அதன் பாதுகாப்பு செலவீனம் குறைவடையப்போவதில்லை. மேலும் படைத் தரப்பின் இழப்புக்களை பொறுத் தவரையில் நடைபெற்ற ஈழப்போர்களில் இலங்கை இராணுவம் அதிக விலையை செலுத்தியிருந்தது.

1981 ஆம் ஆண்டு லெப்.சீலன் மேற்கொண்ட தாக்குதலில் இருந்து 2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்த காலப்பகுதி வரையிலான மூன்று ஈழப்போர்களில் 17,066 இராணுவத்தின் கொல்லப்பட்டதாகவும், 9,220 அதிகாரிகள் உட்பட 29,486 இராணுவத்தினர் அவயங்களை இழந்ததாகவும் படைத்தரப்பு தெரிவித்திருந்தது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ 2005ஆம் ஆண்டு நவர்பர் மாதம் பதவியேற்ற போது இலங்கை படைத்தரப்பு 26,000 பேரை அதற்கு முன்னைய போர்களில் இழந்திருந்ததாக பாதுகாப்பு செயலாளர் கடந்த வாரம் இந்திய ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

மேலும் அதன் பின்னர் நடைபெற்ற நான்காவது ஈழப்போரின் இழப்புகள் தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 6,200 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன், 30,000 படையினர் நிரந்தரமாக செயற்பட முடியாதவாறு காயமடைந்துள்ளனர்.

கடந்த மூன்று வருடங்கள் நடந்த கடுமையான போரில் கொல்லப்பட்ட 6200 படையினரின் குடும்பங்களையும், 30,000 இற்கு மேற்பட்ட காயமடைந்த படையினரையும் பராமரிப்பதே அரசுக்கு மிகவும் சவாலான விடயம். எனவே இதுவரை நடைபெற்ற போரில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த படையினரையும் அவர்களின் குடும்பங்களையும் பராமரிப்பது அரசுக்கு அதிக பொருளாதார அழுத்தங்களை ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது.

காயமடைந்தவர்களில் பெருமளவானோர் அவயங்களை இழந்துள்ளனர். பார்வையையும், கேட்கும் சக்தியையும் இழந்துள்ளனர். 300 இற்கு மேற்பட்டவர்கள் தமது இயங்கும் சக்தியை முற்றாக இழந்துள்ளனர்.

இறந்த அல்லது காணாமல்போன படையினருக்கு அரசு காப்புறுதி நிதி மூலம் 750 அல்லது 1200 டொடல்களை வழங்கி வருகின்றது. அதன் பின்னர் அவர்களின் உறவினர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகின்றது. காயமடைந்த படையினருக்கும் காப்புறுதி நிதியும், ஊதியங்களும் வழங்கப்படுகின்றது. ஆனால் அவை மருத்துவச் செலவுகளுக்கு போதுமானதல்ல என படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்த படையினரை பராமரிப்பது, இறந்த படையினருக்கு நிதிகளை வழங்குவது, இராணுவத்தின் பலத்தை தக்கவைப்பது போன்ற விடயங்களால் இலங்கையின் பாதுகாப்பு செலவீனம் அதிகரித்து செல்கின்றதே தவிர அது போரின் பின்னரும் குறைவடையும் சாத்தியங்கள் இல்லை.

இலங்கையில் போர் நிறைவடைந்து அங்கு நிரந்தர அமைதி தோற்றுவிக்கப் பட்டால் அதன் இராணுவக் கட்டமைப்புக்கு 20,000 இராணுவத்தினரே போதுமானது என்பது இராணுவ ஆய்வாளர்களின் கருத்து.

ஆனால் இலங்கை அரசு தற்போது 450,000 சேவையில் உள்ள படையினரையும் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட காயமடைந்த படையினரையும் 32,000 இறந்த படையினரின் குடும்பங்களையும் தொடர்ந்து பராமரிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதாவது தனது தேவையை விட பல மடங்கு அதிகமாக படையினரை தொடர்ந்து பராமரிக்கும் நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவத்தில் 80,000 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததாகவும் 2006 ஆம் ஆண்டு ஜுன் மாதம் தொடக்கம் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையிலும் வான்படையினர் 1345 வான் தாக்குதல்களையும், குண்டு வீச்சுக்களையும் மேற்கொண்ட தாகவும் படைத்தரப்பு தெரிவித்திருந்தது. பெரும் தொகையான படையினரை இணைத்துக் கொண்டதாலும் அதிக சுடுவலுவை பிரயோகித்ததாலும் தான் போரில் வெற்றிபெற முடிந்ததாக தற்போது அரசு தெரிவித்துள்ளது.

போர் நிறைவடைந்த ஒரு வருடம் அண்மித்துள்ள நிலையில் போர் எவ்வாறு வெற்றி கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் இலங்கையின் படைத்துறை உத்திகள் குறித்து பல ஆய்வுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

வேல்ஸில் இருந்து அருஷ்

ஆனால் போரை இலங்கை அரசு இரு வழிகளில் தான் வெற்றி கொண்டுள்ளது. அதாவது அதிக படைவலு, அதீத சுடுவலு என்ற இரு காரணிகள் தான் ஒரு சிறிய அமைப்பின் மரபுவழியிலான கட்டமைப்பை முறியடிக்க இலங்கை அரசுக்கு உதவியிருந்தது.

ஒரு பிரதேசத்தின் உட்கட்டுமானங்களினதும், மக்களினதும் அழிவுகள் தொடர்பில் அக்கறைகள் கொள்ளாத எந்த படையினருக்கும் போரில் வெற்றி பெறுவதற்கு மேற்கூறப்பட்ட இரு காரணிகளும் போதுமானது. அதற்கு வேறு போரியல் உத்திகள் அவசியமற்றது.

நன்றி: வீரகேசரி

# ஐ.தே. கட்சியின் கட்டமைப்பில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டும்

## சஜித் பிரேமதாஸ வேண்டுகோள்

ஐக்கியதேசியக் கட்சியின் உள்ளக கட்டமைப்பில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை 2004ஆம் ஆண்டிலிருந்தே வலியுறுத்திவருவதாக அக்கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கட்சி பொறுப்புக்களுக்கு நபர்களை தெரிவு செய்யும் நடைமுறையில் ஜனநாயக வரைமுறையும் தீர்மானங்கள் எடுக்கும் வழிமுறைகளில் வெளிப்படைத்தன்மையும் அவசியப்படுவதாக அவர் கூறினார்.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தான் மோதல் போக்கை கடைபிடிக்க வில்லை எனவும் கட்சியின் நலனுக்காகவே கருத்துக்களை முன்வைத்துள்ளதாகவும் சஜித் கூறினார்.

ஆனால் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் யாராக இருக்கவேண்டும் என்பதை தன்னால் மட்டும் தீர்மானிக்க முடியாது எனவும் அந்த தீர்மானத்தில் கட்சியின் அனைத்து மட்டங்களில் உள்ளவர்களும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக்கட்சியின் சீர்திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு கட்சித்தலைமை தயாராகவே உள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாளருமான டி.எம்.சுவாமிநாதன் கூறினார்.

கட்சி மறு சீரமைப்புக்கான கோரிக்கைகளுக்கு செவிமடுக்க தலைமைத்துவம் தயாராகவே உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கட்சியில் சீர் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமானால் அவற்றுக்கான கோரிக்கைகள் கட்சியால் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும் எனவும் சுவாமி நாதன் தெரிவித்தார். (ச-5,9)

# மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் வலி. வடக்கில் மீளக் குடியமர்வு!

வலி. வடக்குப் பகுதிகளில் உள்ள மிதிவெடிகள், அகற்றப்பட்டதும் மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர் என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துரு சிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு யாழ்ப்பாண பத்திரிகையா ளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். வலி. வடக்குப் பகுதிகளிலுள்ள கண்ணி வெடிகள் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன. இவை எதிர்வரும் மூன்று மாதங்களில் நிறைவடைந்து விடும்.

அதன் பின்னர் அவ் பகுதியில் இருந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர். அதுவரைக்கும் மக்கள் பொறுமையாக இருந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (ச-5)

# வவுனியாவில் பொது இடங்களிலிருந்து வெளியேறுவதற்கு படையினர் தீர்மானம்

(கொழும்பு)

வவுனியாவில் சுமார் 10 ஆண்டுகளுக் கும் மேலாக பொது இடங்களில் நிலை கொண்டுள்ள பாதுகாப்புப்படையினர் அங்கிருந்து வெளியேறவுள்ளனர்.

யுத்தம் முடிபுக்கு கொண்டுவரப்பட்டு எதிர் வரும் 19ஆம் திகதியுடன் ஓராண்டு பூர்த்தியாகவுள்ள நிலையிலேயே அவர்கள் இவ்வாறு வெளியேறவுள்ளனர்.

இந் நிலையில் பூந்தோட்டம் சிறுவர் பூங்கா மைதானம், வவுனியா குளக்கட்டு மற்றும் பிரதான வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.

அத்துடன் பாக் வீதியிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியசாலையில் தங்கியிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# யாழில் சட்டம் ஒழுங்கை நிலை...

யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க மற்றும் படை அதிகாரிகள் நேற்றிரவு யாழ்.பத்திரிகையாளர்களை 51ஆவது படையணி தலைமையகத்தில் யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன் போதே யாழ்.கட்டளைத்தளபதி மேற்கண்டதகவலை தெரிவித்தார். இதன் போது அவர் தெரிவித்ததாவது,

யாழ்.குடாநாட்டிலிருந்து படையினரை படிப்படியாக மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் நேற்று முன்தினம் பலாலி படைத் தலைமையகத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் மேற்படி முடிபை மறு பரிசீலனை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் கடத்தல் முயற்சி மற்றும் கடத்தி படுகொலை செய்த சம்பவங்களே இம் முடிபுக்கு காரணமாக அமைந்துள்ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் பொலிஸார், சட்டம் ஒழுங்கை முழுமையாக அமுல் படுத்தி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் இராணுவத்தினர் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவர் எனவும் பொலிஸ் மா அதிபருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

எந்தவொரு குழுவோ, இயக்கமோ வண்முறையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

முப்பது வருடங்களின்பின் மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கின்ற போது கடத்தல், கப்பம் பெறல் என சில வன்முறைகள் வருவது துரதிர்ஷ்டமானது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தவர்களாக இருக்கலாம் எவரும் தமது குழந்தைகளை காப்பாற்ற எத்தனை மில்லியனை வழங்குவார்கள். எனினும் பணத்தைக் கேட்டு விட்டு குழந்தையைக் கொலை செய்வது என்பது பயங்கரமானது.

**வன்னியில் தற்கொலைகள் அதிகரிப்பு**

வன்னி துணுக்காய், மல்லாவி உள்ளிட்ட பகுதிகளில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரிக்கின்றன.

இதன் காரணமாக அம் மக்களுக்கு உளரீதியாக மேம்படுத்தல் நடவடிக்கைகளை நான் மேற்கொண்டு வருகின்றேன்.

இதற்காக சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டு உள, சமூக, மேம்பாட்டு வைத்திய நிபுணர் சப்பிராஸ் அழைக்கப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் இல வசக்கருத்தரங்குகளை முன்னெடுத்து வருகின்றேன் என யாழ். கட்டளைத்தளபதி மஹிந்த கத்துரு சிங்க குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# பாணின்...

உயர்த்துவது தொடர்பாக நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ள நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய பாண் மற்றும் ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலைகளில் திருத்தம் கொண்டு வரப்படும் என அவர் தெரிவித்தார்.

பேக்கரி உற்பத்திகளின் விலைகளை தீர்மானிப்பதற்கான அதிகாரம் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கே உள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன குறிப்பிட்டார். (ச-3,5)

# ஐ.தே.கட்சி...

நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

1994ஆம் ஆண்டு முதல் அம்பாந்தோட்டை ஆசனத்திலிருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவாகிவரும் சஜித் பிரேமதாஸவுக்கு அதிகளவான அதிகாரங்களை வழங்க தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க உடன்பட்டுள்ளதாக கபீர்ஹாசிம் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமையன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்பின் போது கபீர்ஹாசிமும் பிரசன்னமாகியிருந்தார்.

இதன் போது கட்சி வழங்கும் பொறுப்பை ஏற்க தாம் தயார் என சஜித் பிரேமதாஸ உடன்பட்டதாக ஹாசிம் குறிப்பிட்டார். (ச-5)

# இந்தியத்...

தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார். (ச-5)

# ஈ.பி.டி.பியின் சாவகச்சேரி...

நடமாடி திரிகின்றனர் என சாவகச்சேரி நீதிமன்றத்துக்குக்கிடைத்த கடிதத்தின் அடிப்படையில் இவரிடமும் யாழ். மாநகர சபை பிரதி மேயர் றீகனிடமும் விசாரணை செய்யுமாறு சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகரையும் சாவகச்சேரி நீதிமன்றம் பணித்தது.

இவ்விடயம் தொடர்பாக எனக்கு நீதி மன்றப் பதிவாளரினால் தகவல் வழங்கப்பட்டது. இது குறித்து வடமாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபரிடம் நேற்று தொடர்பு கொண்டு கேட்ட போது சாள்ஸ் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் நாளை (இன்று) நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார் என யாழ். இராணுவத்தளபதி கூறினார்.

இதே சமயம் சாவகச்சேரி நீதவான் வாசஸ் தலத்துக்கு அருகில் புதிய காவலரண் ஒன்று அமைத்து நீதவானுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் நேற்றிரவு கூறினார். (எ-5)

# 2010ஆம்...

திட்டமிடப்பட்டுள்ளது. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் மட்டுமே அரசியல் சாசனத்தின் அடிப்படையில் இவ்வாறு கணக்கு மீதான வாக்கெடுப்பு யோசனையை சமர்ப்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையை தமது கட்சி வன்மையாக கண்டிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# நெல்லியடியில் நேற்றிரவு...

யடி பிரதான வீதியில் காணப்படுவதாக நேற்றிரவு தகவல்கள் தெரிவித்தன.

இவர் முன்னர் பந்தல் மற்றும் மின்னொளி சேவைகளை மேற்கொண்டு வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சுமார் ஒன்றரை வருடங்களின் பின்னர் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இவ் சூட்டுச் சம்பவத்தையடுத்து வடமராட் சியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

வாகனங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் அடையாள அட்டை பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தகவல்கள் மேலும் தெரிவித்தன. (எ-24)


# வேலையாட்கள் தேவை

பிரபல சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலை வெற்றிடங்களுக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆண், பெண் இருபாலாருக்கும்

- உணவு பரிமாறுபவர்கள்
- காசாளர்
- பில் கிளாக்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்
- சமையல் வேலை உதவியாளர்கள்
- றொட்டி போடுபவர்கள்
- மரக்கறி வெட்டுபவர்கள்
- சமையல் ஆட்கள், இடியப்பம் போடுபவர்கள்
- ரீமேக்கர், சுவீற் மேக்கர்
- பாசல் கட்டுபவர், வெளிக்கள உத்தியோகத்தர்.

ஆகிய வேலைக்கு 3 நேர உணவு தங்க இருப்பிட வசதி சம்பளம் போன்றவை சிறப்பாக கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

**மலாயன் கபே**
**36,38, பெரிய கடை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

T.P:.021 222 2373
077 7917753

(1810)


# அவைத்...

பெற்றிருந்தது.

இதேவேளை ஆளும் கட்சியின் பிரதம கொறடா பதவிக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத்திலும் தினேஷ் குணவர்த்தன பிரதம கொறடாவாக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பொலிஸ்...

முறைகள் இன்றி நடத்தப்பட வேண்டும் என தெரிவித்து நேற்று யாழ். பொலிஸாரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இக் கண்டனப் பேரணி நேற்றுக்காலை மேற்கொள்ளப்படவிருந்த வேளை கொழும்பிலிருந்து பேரணிக்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை என யாழ். பொலிஸாரால் மக்கள் சக்தி அமைப்புக்கு தெரிவித்ததையடுத்து கடத்தல் சம்பவங்களுக்கு எதிரான கண்டனப் பேரணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எ-7)


# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி செல்லையா



மாதகலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி செல்லையா 30.04. 2010 (வெள்ளிக்கிழமை) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையாவின் (காவலாளி, அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்) பாசமிகு மனைவியும், தவமணிதேவி, புஸ்பராணி, தங்கராசா, திலகராணி, மனோரஞ்சிதம் ,ரஞ்சனா ஆகியோரின் அன்புத் தாயும் தர்மராஜா, கண்ணதாசன், கமலலோஜினி, கமலேந்திரம், சண்முகவேல்,ஜீவமோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மார்க்கண்டு, செல்லமணி, காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் விஜயரட்ணம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கபில் மற்றும் சுபீதரன், பிரக்ஷனா, விஜயராஜ், சரண்ஜா, சோபிஜா,ராகவி, சிந்துஜன், நிஜாந்தன், கிஜாந்தன், சாரங்கன், தெய்வீகா, ஆதவன், மிலானி, ஹணுஜன், ஹரிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கபிலனின் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.05.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கு. **பிள்ளைகள், மருமக்கள்.**

(1314)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.